LAND ENCROACHMENT ACT.

1905-ம்வருஷத்து 3-வது ஆக்ட்.

நில ஆக்கிரமிப்புச் சட்டம்.

ஷை பப்ளிஷர்

ஆர். சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

அச்சிட்டது.

Book (4)

மதுகரவேணி விலாஸம் புஸ்தகசாலை,
வேப்பேரி போஸ்டு—மதறுஸ்.

M. V. Press, Vepery-Madras.

Price As. 0-4-0] [Postage Extra.

நில் ஆக்கிரமிப்பு சட்டம்.

சென்னபட்டணம் 1905 - ம் வருஷத்து 3 - வது ஆக்ட்

கவர்ன்மெண்டார் சொத்தாயிருக்கிற நிலங்களை அனுமதியில்லாமல் அனுபவிப்பதைத் தடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்வதற்கான ஆக்ட்.

ஆலோசனை சபையிலுள்ள சென்னபட்டணம் கவர்னரவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்ட்டானது 1905வரு ஏப்ரல்மீ 19உ கவர்னரவர்களாலும் 1905வரு மேமீ 22உ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப் பட்டு, இதனால் யாவருக்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது.—

பீடிகை.

கவர்ன்மெண்டார் சொத்தாயிருக்கிற நிலங்களை அனுமதியில்லாமல் அனுபவிப்பதைத் தண்ட அல்லது தடுப்பதற்கான தீர்வை அல்லது கட்டணம் விதித்துத் தடுப்பது வழக்கமாயிருக்கிறபடியாலும் அப்படிப்பட்ட வழக்கத்துக்கு எவ்வளவுவரையில் சட்டமூலமாய் அதிகாரம் ஏற்பட்டிருக்கிறதென்பதைக் குறித்துச் சந்தேகம் உண்டாயிருக்கிறபடியாலும், அப்படி அனுபவிப்பதைத் தடுப்பதற்காகச் சட்டமூலமாய் நிபந்தனையேற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்.—

நோட்.—(1) மதராஸ் டவுனில் சர்க்கார் சொத்தாகியும், சர்க்கார் ஆதீனத்திலுமிருக்கிற நிலங்களை ஆக்கிரமித்ததற்காக தண்டதீர்வை விதித்தது சட்டசம்மதமென்று இந்த ஆக்டு ஜாரிசெய்யப்பட்டதற்கு முன்னிட்டு தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (22-ம-100; 27 ம-399.)

(2) மதராஸ் ராஜதானியில் தண்டத்தீர்வை விதிப்பது சட்டவிரோதம் என்று இந்த ஆக்டு ஜாரிசெய்யப்பட்டதற்கு முன்னிட்டு தீர்மானிக்கப்பட்டது (38-ம 312; 27 ம-386.)

(3) ராஜபோகத்துக்கு இராஜரீக சுதந்தரம் பாராட்ட வாஸ்தவத்தில் சர்க்காருக்கு பாத்தியமிருக்கிறது. இராஜபோகமென்றால் நிலத்தில் விளையும் மாசூலில் ஒருபாகம் என்று அர்த்தமாகும். மாசூலின் ஒருபாகமென்றால்

மாசூல் பூராவும் என்றாவது அல்லது மாசூல் பூராவுக்கும் அதிகமாக என்றாவது அர்த்தமாகமாட்டாது. மாசூலின் ஒருபாகமென்பது குறைந்தபக்ஷம் பூரா மாசூலுக்கும் கொஞ்சமாகிலும் குறைந்ததாக இருக்கவேண்டும்.

(4) ராஜபோகமென்பதைத்தான் சர்க்கார் தீர்வையென்றுசொல்லப்படுகின்றது. அபராதத்தீர்வை அல்லது தண்டத்தீர்வை என்ற மொழிகள் பொருந்தாத தப்புப்பெயர்கள். ஏனென்றால் தண்டத்தீர்வை அல்லது அபராதத்தீர்வை என்பது தீர்வை அதாவது இராஜபோகம் ஆகமாட்டாது. தண்டத்தீர்வை அல்லது அபராதத்தீர்வையானது சர்க்கார் நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டவனை அப்புறப்படுத்தும் பொருட்டு அவனுக்கு அபராதம் அல்லது தண்டமாக விதிக்கப்படுகிறது. இராஜபோகம் என்ற இராஜரீக சுதந்தரத்தைக்கொண்டு தண்டம் அல்லது அபராதம் விதிப்பது ஒவ்வாதகாரியம், ஆகையால் தண்டத்தீர்வை விதிப்பதற்காகவே இந்தநூதன சட்டம் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

(5) தண்டத்தீர்வை விதித்து வசூல் செய்வதினால் அனுமதி பெறாமல் அனுபவிக்கும் காரணத்தைக்கொண்டு வரும்படி சம்பாதிக்கவேணுமென்பது சர்க்காருடைய அபிப்பிராயம் அல்ல; ஆனால் அப்படி அனுமதிபெறாமல் ஆக்கிரமிப்பதைத் தடுக்கவேண்டுமென்பதும், அடக்கவேணுமென்பதும், சர்க்கார் கொள்ளும் அபிப்பிராயம்.

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. இந்த ஆக்டை, "1905-ம் ஹூ த்திய சென்னப்பட்டணத்து நிலம் ஆக்கிரமிப்பதைப் பற்றிய ஆக்ட்" என்று சொல்லலாம். இது சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுவதுக்கும் வியாபிக்கிறது.

இந்தச்சட்டம் கவர்னர் ஜெனரல் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தேதியாகிய 1905-ஹூ மேமீ 22௳ முதற்கொண்டு அமுலுக்கு வந்திருக்கின்றது. (இந்த ஆக்டு 15-வது பிரிவை பார்க்க.)

பொதுவான ரஸ்தாக்கள் முதலியவைகளிலும் சில நிலங்களிலும் உரிமைப்பாத்தியதை.

2. (1) சகல பொதுவான ரஸ்தாக்களும், தெருக்களும், சந்துகளும், பாதைகளும், அவைகளின்மேலாகவாவது பக்கமாகவாவதுள்ள வாராவதிகளும், சாக்கடைகளும், கரைகளும், அடைப்புகளும் நீரேற்றக்கு நிப்புர்குக்கிழே சமுத்திரம், ஹார்பர், சமுத்திரக்கால், ஆகிய இவைகளின் அடித்தரையும், நதிகள், ஓடைகள், சிற்றாறுகள், ஏரிகள், குளங்கள் ஆகிய இவைகளின் அடித்தரையும், சகலகால்வாய்களும், நீரோட்டங்

களும், நிலைபாய்நிற்கும் தண்ணீரும், ஓடிக்கொண்டேயிருக்கும் தண்ணீரும், சகல நிலங்களும், எவ்விடத்திலிருந்தபோதிலும்,—

(a) யாதொரு ஜமீன்தாரர், பாளையக்காரர், மிட்டாதாரர், ஜாகீர்தாரர், சுரோத்தியதாரர், அல்லது இனும்தாரருடைய சொத்தாகவாவது, அவர்களில் எவர் மூலமாகவேனும் பாத்தியதைகொண்டாடுகிற அல்லது எவர் கீழாகவேனும் கைப்பற்றில் வைத்திருக்கிற யாதொரு நபருடைய சொத்தாகவாவதிருந்தாலும்,

(b) மேற்கண்ட நபர்களில் யாருக்காவது சிஸ்த், கட்டுபடி, ஜோடி, பொறுப்பு, அல்லது க்விட்ரென்ட் என்னும் வாடகை செலுத்துகிற யாதொரு நபருடைய சொத்தாக விருந்தாலும்,

(c) மலபாரில் ஜன்மி ஆட்சி என்று சொல்லப்படுகிற ஆட்சி அல்லது தென்கன்னடத்தில் வர்க்தரர் ஆட்சி என்று சொல்லப்படுகிற ஆட்சி உட்பட ரயத்வாரி காணியாட்சியின்படி கைப்பற்றில் வைத்திருக்கிற யாதொரு நபருடைய சொத்தாகவாவது, நேரே கவர்ன்மெண்டாருக்கு நிலவரியைச் செலுத்த எவ்விதத்திலாகிலும் உட்பட்டிருக்கிற யாதொரு நபருடைய சொத்தாகவாவதிருந்தாலும்,

(d) உரிமைப் பாத்தியதையுடன் நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருந்து ரெஜிஸ்டராயிருக்கும் வேறே யாதொரு நபருடைய சொத்தாக இருந்தாலும்,

(e) லைசென்ஸ் மூலமாகவல்லாமல் கவர்ன்மெண்டாரிடமிருந்து க்ரான்ட் பெறும் ஏற்பாட்டின்படி நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருக்கும் வேறே யாதொரு நபருடைய சொத்தாக இருந்தாலும்,

அவைகள் நீங்கலாகவும், நிலங்கள் விஷயத்திலேயென்றால், அவைகள் கோயில் கட்டுவதற்கான நிவேசனமாக இருந்தாலும், கட்டிடம் கட்டுவதற்கான நிவேசனமாகவாவது புழைக்கடையாகவாவது ஸ்வாதீனத்திலிருந்துவந்தாலும் அவைகள் நீங்கலாகவும், மற்ற பொதுவான ரஸ்தாக்கள் முதலியவைகளெல்லாம் சட்டப்படி உண்டாயிருக்கும் சகல வழிநடைப் பாத்தியதைகளுக்கும் பொதுவான மற்ற பாத்தியதைகளுக்கும், இதர பூமிக்குடையவர்களுடைய சட்ட சம்மந்தமான பாத்தியதைகளுக்கும் வழிநடை முதலிய வசதியுரிமை

களுக்கும், மாமூலாயுள்ள சகல பாத்தியதைகளுக்கும் எப்போதும் உட்பட்டு, அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டதிட்டத்தில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி கவர்ன்மெண்டாருடைய சொத்தாவதோடுங் கூட கவர்ன்மெண்டாருடைய சொத்தாயிருப்பதாகவும் இதனால் நிர்ணயிக்கப்படுகிறது.

(2) யாதொரு பிரதேச அதிகாரிக்குச் சங்கிரமித்திருக்கிற சகல பொதுவான ரஸ்தாக்களும் தெருக்களும், இந்த ஆக்டின் காரியங்களுக்காகக் கவர்ன்மெண்டாருடைய சொத்தாயிருப்பவைகளாக எண்ணப்படும்.

விவரணம்.—இந்தப் பிரிவிலே, "நிரேற்றக்குறிப்பு" என்பது வருஷத்தின் எந்த ருதுவிலாகிலும் அமாவாசியை பருவகாலத்திய சாதாரண நிரேற்றத்தினால் அடையக்கூடும் அதிக உயர்ந்த ஸ்தானமென்று அர்த்தமாகும்.

நோட்.—(1) பொது உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கும் புறம்போக்கு நிலங்களுக்கு கவர்ன்மெண்டார் பொது ஜனங்களுடைய பொருப்பாளிகளாயிருக்கிறார்கள். கிராமசங்கம் இப்போது ஜீவித்திருக்கவில்லை. அது வெகு காலத்துக்கு முன்னிட்டே மறைந்துபோய்விட்டது.

(2) பொதுப்பிரயோஜனங்களுக்காக விடப்பட்டிருக்கும் புறம்போக்கு நிலங்களின் சொந்தம் சர்க்காரிலிருக்கிறது. அவைகளை உபயோகப்படுத்தும் பாத்தியம் பொதுஜனங்களைச்சேர்ந்ததென்று அடியில்கண்டபடி கவுன்சில் மெம்பர்களால் சட்டநிரூபணகாலத்தில் வாதிக்கப்பட்டிருக்கிறது.

(3) கிராமபொதுச் சங்கம் என்பது ஜீவித்திருக்கின்றது. உதாரணம் தஞ்சாவூர், செங்கல்பட்டு ஜில்லாக்களில் சமுதாய நிலங்களும் தோப்புகளும் இருக்கின்றன. (இ. லா. ரி. 28. பம்பாய் 276, 283, 284) கனம் பொருந்திய வி. சி. தேசிகாசாரியார் ப. 224 போர்ட்ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட் 1905.)

(4) இந்தப் பிரிவில் விலக்கப்பட்டிருக்கும் சொத்துகள் அநேகமாய் 1865-வருஷத்து 8-வது ஆக்ட் 1-வது பிரிவிலிருந்து எடுத்து எழுதப்பட்டிருக்கின்றன. (கனம் பொருந்திய மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸின்வாதம், போர்ட்ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட் 1905-வரு பக்கம் 241.)

(5) இந்தப் பிரிவின் கீழ் சொல்லப்படாத வேறெந்தவிதமான சொந்த சொத்தாவது இருக்கிறதாக ருசுவானால் அந்தவிதமான சொந்த சொத்தை இந்தப்பிரிவின் விலக்குகளுக்குள் கொண்டுவரும்பொருட்டு இந்த ஆக்ட் திருத்தப்படும். (கனம் பொருந்திய ஜி. ஸ்டோக்ஸ், பக்கம் 236.)

(6) செங்கல்பட்டு ஜில்லாவில் புறம்போக்கு நிலங்கள் மிராசுதாரர்களுக்குச்சொந்தமானவைகள். (16. ம. 371.) இந்த தீர்மானம் செங்கல்பட்டு ஜில்லா முழுவதுக்குஞ் சம்பந்தப்படாமல் அந்தத் தீர்மானத்தில் கண்ட ஒரு கிராமத்துக்கு மாத்திரம் சம்மந்தப்படுகிறது. (30 ம. 510, 512.)

(7) செங்கல்பட்டு ஜில்லாவில் மிராசுதாரர்களுக்குச் சொந்தமான புறம் போக்கு நிலங்களில் இருக்கிற தண்ணீர், சர்க்கார் தண்ணீர் என்று சொல்லக் கூடுகிறதில்லையானபடியால் அந்தத்தண்ணீருக்கு சர்க்கார் தீர்வை விதிக்கக் கூடு கிறதில்லை. (30 ம. 510; 26 ம. 371.)

(8) இயல்பான குளம் குட்டைகளினுலாவது காட்டு நீரோடைகளினுலாவது பாசனம் செய்யும் காரணத்தைக்கொண்டு அவைகளினுடைய அபிவிருத்தியில் சர்க்காருக்கு யாதொரு பொருப்பும் செலவுமில்லாமலிருந்தால் நிலத்துக்கு விதிக்கப்பட்டிருக்கும் நிலத்தீர்வைக்கு அதிகமாக தீர்வை ஜாஸ்தி அல்லது பசலி ஜாஸ்தி அல்லது இப்பெயர்க்கொற்ற வேறு பெயரைவைத்து யாதொரு அதிக தீர்வையையும் கவர்ன்மெண்டார் குடிகளை கேட்கக்கூடாது. (போ. ஸ்டா. ஆர் 10.)

(9) நிலையாய் நிற்கும் தண்ணீரிலும், ஓடிக்கொண்டேயிருக்கும் தண்ணீரிலும் கவர்ன்மெண்டார் எல்லா சந்தர்ப்பங்களிலும் சொந்தம்பாராட்டுகிறதில்லை. இதன் தாத்பரியமாவது தண்ணீரில் இதராளுக்கு பாத்தியமில்லாவிட்டால் சர்க்காருக்கு பாத்தியமிருக்கிறது. இதராளுடைய சொந்தபாத்தியத்திற்குட்பட்டு தண்ணீரை உபயோகப்படுத்துவதிலும் கட்டுப்படுத்துவதிலும் சர்க்காருக்கு முழுபாத்தியமுமிருக்கிறது. (கனம் மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ், பக்கம் 246.)

(10) பாசனவேலைகளை பரிபாலனம் செய்வதும் ஆளுவதும் ஆதிகாலம் முதற்கொண்டு இந்தியா கவர்ன்மெண்டாருடைய உத்தியோகமாயும் கடமையாயுமிருக்கின்றன. ஆகையால் கவர்ன்மெண்டாருக்கு பாத்தியப்பட்ட பாசன வேலைகளில் மராமத்து செய்யவும் அபிவிர்த்திசெய்யவும் சர்க்காருக்கு பாத்தியம் இருக்கிறது. ஆனல், அப்படி மராமத்து அல்லது அபிவிர்த்தி செய்வதினுல் மற்றவர்களுக்குள்ள தண்ணீர் பாத்தியதைக்கு உண்மையான குறைவு உண்டாகக்கூடாது. பாசனவேலைகள் உடைப்பட்டுபோன பொழுது மதராஸ் கட்டாயவேலை ஆக்ட் 1858-வருஷத்து 1-வது ஆக்டின்படிக்கு வாய்க்கால்களை துரஸ்து செய்வது, வேலை ஒத்தாசை செய்வதுபோன்ற கட்டாயமாய் செய்ய வேண்டிய வேலைகளை செய்வதினுல் அவனுக்கு சர்க்காருக்கு விரோதமாக கால தோஷத்தால் அடையக்கூடிய பாத்தியதை உண்டாகமாட்டாது. (1-இ-அ 364; 5-ம-ஜ-ரி-6; 28-ம-72, 542.)

(11) ஒரு ஆற்றின் தண்ணீர் எப்போதும் போய்க்கொண்டு இருக்கும் போக்கை விட்டு அடுத்த ஒரு சொந்த நிலத்தில் பிரவேசித்து அதில் புதிய

வாய்க்கால் ஒன்று உண்டாகி தண்ணீர் வேறு மார்க்கத்தில் செல்லுமானால் புதியவாய்க்காலில் சர்க்காருக்கும் பொது ஜனங்களுக்கும் பாத்தியம் உண்டு. ஆனால் புது வாய்க்காலின் தண்ணீர்பரப்பின் பூமி பாத்தியம் ஆதி சொந்தக் காரனுக்கே இருக்கிறது. புது வாய்க்கால் தண்ணீர் வற்றி வேறு மார்க்கத் தில் போய் புது வாய்க்காலே கட்டாந்தரையாக செய்யுமானால் புது வாய்க் கால் தரை மறுபடியும் ஆதி சொந்தக்காரனுடைய முழுஆதீனமாகிவிடுகிறது. அதில் சர்க்காருக்காவது பொது ஜனங்களுக்காவது யாதொரு பாத்தியமு மில்லை. (பெங்கால் 1825-வருஷத்து 11-வது ரெகுலேஷன் செ. 4; 27 அல-660.)

(12) ஒரு கடல் அல்லது ஆற்றிலிருந்து படிப்படியாகவும் தாமதமாகவும் புலப்படாமலும் வருஷம் கொஞ்சமாக பக்க நிலக்காரனுக்கு நிலம் சேர்ந்தால் அப்படி சேர்ந்த ஜாஸ்தி நிலம் பக்க நிலக்காரனுக்கு பாத்தியப்பட்டது. ஏனென் றால் பிரதி வருஷமும் தண்ணீர் ஓரங்களில் உண்டாகும் நிலம் ஒரு அங்கு லம் அல்லது ஒரு அடி அல்லது ஒரு கெஜம் எதுவாயிருந்தாலும் அது யாருக் குப்பாத்தியப்பட்டது என்ற அம்சத்தை நிச்சயிப்பது கஷ்டமாய்விடும். (13 ம. இ. அ. 467; 5 பெ. லா. ரி. 521; 27 அல. 668.)

(13) ஒரு தண்ணீரின் போக்கு திடீரென மாறுவதினால் உண்டாகும் நிலம் ஆதி சொந்தக்காரனுக்கே பாத்தியப்பட்டது. (27 அல. 655.)

(14) தண்ணீர்ப்பாசன விஷயமான பாத்தியதையை பற்றி ஒவ்வொரு நிலத்தின் சொந்தக்காரனும் அவனது நிலத்தின் வழியாகப்போய்க்கொண்டி ருக்கும் ஓடையின் பலனை அனுபவிக்க பாத்தியமுடையவனாகவிருக்கிறான். தண்ணீர் இயல்பான ஸ்திதியில் ஓடும் நிலைமை ஷை பாத்தியம் முழுவதும் ஒருவனுடையதே யாகாமற்போனபோதிலும் ஓடுகிற தண்ணீர் ஓடையின் இருபக்கத்திலும் கரைகளின்பேரிலிருக்கும் நிலங்களின் சொந்தக்காரர்கள் எல்லாருடையவும் அதேமாதிரியான பாத்தியதைக்கு உட்பட்டு கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கும் பொதுவான மானியத்தை நியாயமானபடி அனுபவிக் கும் பாத்தியம் என்று ஏற்படுகிறது. சென்னை இராஜதானியில் ஷை பாத் தியதையின் வரையறையை ஈஸ்மெண்டு சட்டம் 7-வது பிரிவு (i) உட்பிரி வில் தகுதியானபடி அடியிற்கண்ட விதமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. (j) குடிப்பதற்காகவும், வீடுகளில் வேண்டிய காரியங்களுக்காகவும், ஆடு மாடு வகைரு கால்நடைகளுக்கும் தண்ணீர் காட்டவும் நீர் ஓடை குளம் அல்லது குட்டைகளின் இருபக்கக் கரைகளின் பேரிலிருக்கும் நில சொந்தக்காரர்க ளுக்கு இருக்கிற பாத்தியமும் அப்பேர்க்கொத்த ஒவ்வொரு சொந்தக்காரர்க ளும் அவனுடைய நிலத்தை பாசனம் செய்யவும் அந்த நிலத்திலிருக்கும் ஏதாவது ஒரு தொழில்களுக்கு வேண்டிய காரியத்துக்காகவும் தண்ணீரை உபயோகப்படுத்தி செலவழிக்கும் பாத்தியமுமிருக்கிறது. ஆனால், அவன் அப்

படி உபயோகிப்பதினுல் அவனைப்போலொத்த மற்ற சொந்தக்காரர்களுக்கு பிரதானமான சேதம் விளைவிக்கக்கூடாது. (29-ப-357.)

(15) ஒரு ஆறு எப்பொழுதும் போய்க்கொண்டிருக்கும் மாமூல் போக்கைவிட்டு விலகி புதிய மார்க்கத்தில் போகின்றது. ஆனுல், பழைய இடத்தில் கொஞ்சம் தண்ணீர் தங்கி இந்த தண்ணீர் வருஷம் முழுவதும் ஆற்றுத் தண்ணீருடன் கலந்துக்கொண்டே இருக்கிறது. ஆற்றின் மீன் குத்தகை எடுத்தவனுக்கே பழைய இடத்தில் நிற்கும் தண்ணீரில் மீன் பிடிக்கும் பாத்தியதையும் சேர்ந்ததாக இருக்கிறது. (35-க-15.)

(16) அடிக்கடி பொங்கி வற்றிக்கொண்டிருப்பது கப்பல் செல்லத்தக்கதுமான ஒரு நதியின் ஆற்றுத்தரையானது சர்க்காருக்கு சர்வ சுதந்திரமாய் பாத்தியப்பட்ட சொத்தாயிருக்கிறது. அந்தசொத்தை இஷ்டப்படி பராதீனப்படுத்த சர்க்காருக்கு பாத்தியமுண்டு. (28-ம-505.)

(17) ஆற்றுத்தரையின் ஒரு பாகமாகிய நீர் நிலையானது வெய்யில்காலத்தில் வற்றிப்போனபோதிலும் அந்த நீர் நின்ற பாகம் ஆற்றுடன் சேர்ந்ததாகவும் வாஸ்தவியத்தில் அந்த ஆற்றின் ஒரு அங்கமாகவும் எண்ணப்படவேண்டியது. ஷை ஆற்றின் அந்தபாகத்தில் மீன் குத்தகையின் பொதுவான பாத்தியதையை குத்தகைக்கு பெற்ற ஒருவன் அந்த நீர் நிலையின் பாகத்தின் மீது குத்தகையின் பாத்தியதையையும் அனுபவிக்க சுதந்திரமுடையவனுக இருக்கிருன். (32-க-1141.)

மாமூல். போது - ஈஸ்மேண்டு பாத்தியதை.

நோட்.—(1). மாமூல் பாத்தியம் என்பது 1882-ஞூ 5-வது இந்தியன் ஈஸ்மெண்டு ஆக்டு பிரிவு 2 (b)-லும், 2-மதருஸ் லா ஜர்னல் பக்கம் 47-லும் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) மாமூல் பாத்தியதையை உண்டுபண்ண இத்தனைவருஷகாலம் அனுபவிக்கவேண்டியது அவசியம் என்று சட்டத்தில் ஏற்படவில்லை. மாமூல் பாத்தியதையை உண்டாக்க அவசியமான அனுபோகம் என்னவிதமாக இருக்க வேண்டியதென்பது அலகாபாத் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (17-அ. 87.)

(3) மாமூல் பாத்தியதையும் மாமூல் வசதியும் ஒன்றுக்கொன்று வித்தியாசமுள்ளது. ஒரு புறம்போக்கு நிலத்தில் இருக்கும் கிணற்றை அநேக வருஷகாலம் பாத்தியதை பாராட்டி அனுபவிப்பது மாமூல் பாத்தியதையாகும். ஒரு புறம்போக்கு நிலத்தில் இருக்கும் கிணற்றை அந்த கிணறு இருக்கிற கிராமத்தில் குடியிருக்கும் ஜனங்கள் அனுபவிக்கிறது மாமூல் வசதிக்கு

(Ease-ment) உதாரணமாகும். கிராமத்தில் குடியிருக்கும் வீட்டை உடைத்தாயிருப்பது அந்த கிராமத்தின் கிணற்றுத் தண்ணீரை உபயோகப்படுத்தும் மாமூல் வசதியின் ஆட்சி சொத்தாக ஏற்படுகிறது.

(4) வீடுகளை அடைந்து கிராமத்திற்கு குடிவருகிறதினல் அந்த கிராமத்திலிருக்கும் குடி கிணற்றின் தண்ணீரை உபயோகப்படுத்த ஜனங்கள் மாமூல் வசதியென்னும் பாத்தியத்தை அடைகிறார்கள். (20-ம. 389.)

(5) மாமூல் பாத்தியதை என்பது அப்பியாசத்தினலும் வழக்கத்தினலும் ஏற்படுகிறது. அப்பியாசம் அல்லது வழக்கம் ஒரு தேசத்தைப் பொருந்தினதாக இருக்கலாம் அல்லது ஒரு விசேஷ வழக்கமாக இருக்கலாம். அப்பியாசம் அல்லது வழக்கம் ஒரு சட்டத்திற்கு சமானமானதாக கருதப்படுகிறது. மாமூல் இந்தியாவில் மேம்பாடுள்ள உசிதமான சட்டம். சட்டத்திற்கு சமதியாக சொல்லத்தக்க ஒரு வழக்கத்தை உண்டாக்க (1) பழமை, (2) ஒரு தன்மையுள்ளது. இந்த இரண்டு குணங்களும் அவசியம். (29-ம. 28.)

(6) ஒரு மாமூல் சில திருஷ்டாந்தங்களினலாவது அல்லது சமீபகாலத்திற்குள் நடந்த நடவடிக்கைகளினலாவது உண்டாக்கப்படமாட்டாது. (29 ம. 25.)

(7) சர்க்கார் சொத்து அல்லாத ஒவ்வொரு சொந்த சொத்தையும் நம்மால் கூடுமானமட்டும் இந்தப் பிரிவின் விலக்குகளின் கீழ் சொல்லியிருக்கிறோம். சர்க்கார் தரிசு நிலங்கள் மேல்கண்ட விலக்குகளின் கீழ் கொண்டுவரப்பட்டாலொழிய சர்க்கார் சொத்துகளென்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. மேற்படி விலக்குகளின்கீழ் வராவிட்டால் ஜனங்கள் கோர்ட்டுக்குப்போய் இந்த பிரிவின் உட்பிரிவில் சொல்லப்படாத பாத்தியதையை உண்டாக்கிக்கொள்ளலாமென்பது எங்களுடைய அபிப்பிராயமல்ல.

(8) ஈஸ்மெண்டு பாத்தியதையையும் பொதுவான பாத்தியதையையும் மாமூலாயுள்ள பாத்தியதையையும் ஜனங்கள் சிவில் கோர்ட்டுக்குபோய் ஸ்திரப்படுத்திக்கொள்ளலாம். (கனம் பொருந்திய அட்வகேட் ஜெனரலின்வாதம். பக்கம் 246.)

(9) ஒரு தேசவழக்கம் நியாயமானதாகவும் நிச்சயமானதாகவுமிருக்க வேண்டும். தேசவழக்கத்தைப் பலாத்காரமாகவாவது திருட்டுத்தனமாகவாவது அல்லது அப்போதைக்கப்போது கிடைக்கும் அனுமதியின்பேரிலாவது அல்லாமல் ஒரு பாத்தியதையைக்கொண்டு அனுபவிக்கவேண்டும். இந்தியாவில் தேசவழக்கமானது அநேககாலமாக இருக்கவேண்டியது அவசியமில்லை. புராதனமல்லாத இக்காலத்திலுண்டான மாமூல் பாத்தியதைகளையும் அங்கீகாரஞ் செய்துகொள்ளவேண்டும். மாமூல் வழக்கத்தை உண்டுபண்ண இத்தனை வருஷத்திய அனுபோகம் வேணுமென்று எங்கும் சொல்லப்படவில்லை. (17-அ - 87.)

விலக்குகள்.—(1) பட்டாவில் எந்த பாத்தியம் சர்க்காருக்கு என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதோ அது சர்க்காருக்கு பாத்தியம். நிறுத்தி வைக்கப்படாதவைகள் குடிகளுக்குச் சொந்தம்.

(2) நிலத்திலாவது ஜலத்திலாவது குடிகளுக்குள்ள சொந்த பாத்தியதையை கவர்ன்மெண்டார் விலைக்கு வாங்கலாம். ஆனால், சொந்த பாத்தியதையைக் கவர்ன்மெண்டார் பறிமுதல் செய்யக்கூடாது.

(3) இந்தியாவில் நிலத்திற்கு இராஜாங்கத்தார் சொந்தக்காரர் என்று சொல்வது ஒரு நூதனமான கொள்கை. இந்தக் கொள்கையானது புராதன இந்து ராஜாங்கத்திலாவது மகம்மதிய ராஜாங்கத்திலாவது ஆதரிக்கப்படவில்லை. இங்கிலீஷ் ராஜாங்கத்தார் தாங்கள் இந்தியாவை ஜயித்து நிலத்திலுள்ள சகல சுதந்திரங்களையும் பறிமுதல்செய்து தாங்கள்நிலத்துக்கு சொந்தக்காரர்களானதாக சொல்லுகிறதில்லை. (கனம் பி. எஸ். சிவசாமிய்யர் வாதித்தது. 212.)

(4) இந்துலாப்படி நிலத்துக்கு சொந்தக்காரர் குடிகள். இராஜாவுக்கு நிலத்தில் விளையும் மாகுலின் ஒரு பாகத்துக்குள்ள பாத்தியமாத்திரமே உண்டு. (12. ப ஐ ரி அப். பக்கம் 1.)

(5) மேற்சொன்ன கொள்கை இந்துலாவில் சொல்லப்பட்டிருப்பதைப் போலவே மகம்மதியன் லாவிலும் சொல்லப்பட்டிருக்கிறது. (கனம் பி. எஸ். சிவசாமி அய்யர் வாதம், ப 211.)

(6) இந்த பிரிவின் கருத்து என்னவெனில் ராஜ்யத்திலுள்ள எல்லா நிலங்களும் சர்க்கார்சொத்துக்கள் என்றும், சொந்த சொத்துக்கள் என்று சொல்லவேண்டுமானால் அதை சர்க்கார் இடத்திலிருந்து அடைந்திருக்கவேண்டும், அல்லது அதை அவ்விதமாக சர்க்காரார் ஒத்துக்கொண்டிருக்கவேண்டும், அல்லது அவ்விதமாக ஒரு சிவில் கோர்ட்டில் தீர்மானம் கிடைத்திருக்கவேண்டும் என்றும் ஏற்படுகிறது.

(7) இந்தப் பிரிவின் விலக்குகளின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் சொந்தச் சொத்துக்களும் சொந்த பாத்தியதைகளும் கவர்ன்மெண்டாரால் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட விலக்குகளில் வேறு எந்தசொந்தபாத்தியதை சொல்லப்படாமலாவது விட்டுவிடப்பட்டாவது இருந்தால் அவைகளை சிவில் கோர்ட்டில் ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டியது.

(8) இந்தச் சட்டத்தில் நியாயவிரோதமில்லை. ஒருவருடைய சொத்தைப் பறிமுதல் செய்யவில்லை. ஒருவருடைய சொந்த பாத்தியதைக்கு இடைஞ்சல் உண்டுபண்ணவில்லை. ஒருவருடைய சொந்த சொத்து இந்த ஆக்டிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது. (சட்டநிரூபணசபை ஆராய்தல் மதராஸ் கெஜட் 1905-ளு ஏப்ரல்மீ 1-உ பக்கம் 208-209.)

(9) இந்தப் பிரிவின் விலக்குகளின் கீழ் சொல்லப்பட்டிருக்கவேண்டியதும் ஆனால் சொல்லாமல் விட்டுப்போனதுமான சொந்த சொத்துக்களாவன:—

(10) சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் சொந்த நபர்கள் பேருக்கு மரப் பட்டாவாகிவரும் மரங்கள்.

(11) சர்க்கார் சொத்தை நேரான நிரூபணத்தைக்கொண்டு நிரூபிக்கப் படவில்லை. எதிர்மறையான நிரூபணத்தைக்கொண்டு நிரூபிக்கப்பட்டிருக் கிறது.

(12) சர்க்கார் சொத்தின் நிரூபணத்தை சொந்த பாத்தியதையை பறி முதல் செய்யும்படியாக உபயோகிக்கக்கூடாது. (கனம் பொருந்திய மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ் பக்கம் 302.)

(13) சொந்த சொத்து அல்லாதது சர்க்கார் சொத்து என்ற சித்தாந்தத் தின்படிக்கு சர்க்கார் சொத்து இன்னது என்பதாக நிரூபிக்க இந்தப் பிரிவில் பிரயத்தனம் செய்யப்பட்டிருக்கிறது. சொந்த சொத்தின் வகுப்புகள் கூடு மான வரையில் கணக்கிடப்பட்டு வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் வரையறுப்பு சரியாகவும் பூர்த்தியாகவும் இல்லை. (கனம் பி. எஸ். சிவசாமியய்யர் பக்கம் 237.)

(14) இந்த சட்டத்தின் நிமித்தமாக சொத்துக்கள் 2-வகுப்புகளாக பிரிக் கப்பட்டிருக்கின்றன. 1-வது சொந்தசொத்து, 2-வது சர்க்கார்சொத்து. இந்த 2-விதமான சொத்துக்களும் இன்னதென்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஷை நிரூபணம் பூர்த்தியாயில்லாமலிருக்கலாம், ஆனால் கூடுமானவரையில் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

(15) கிராம நத்தங்களில் கட்டப்பட்டிருக்கும் அநேக சிறிய கிராமக் கோவில்களை காப்பாற்றும்பொருட்டு இந்த ஆக்டில் திருத்துப்பாடு செய்யவேண் டியது அவசியமாயிருக்கிறது என்று நினைக்கிறேன். கோவில் கட்டுவதற்கான (நிவேசனம்) என்னும் வார்த்தைகளை சேர்ப்பதினால் ஷை திருத்துப்பாட்டை சுலுவாய் முடிக்கக் கூடியதாயிருக்கிறது. (கனம் பொருந்திய மிஸ்டர் எம் ஹாமி க்கின் அபிப்பிராயம் பக்கம் 228.)

(16) கிராம நத்தத்தைச்சேர்ந்த தீர்வை ஏற்படாத புரம்போக்கு நிலம், கிராம நத்தத்தில் வீடுகட்டி குடியிருக்கும் பாகத்திற்கும் வீட்டின் புழக்கடைக் காக உபயோகப்படுத்திவரும் பாகத்திற்கும் குத்தகை விதிக்கவும் வசூல்செய்ய வும் நிலக்காரனுக்கு பாத்தியமில்லை. கிராமநத்தம் எந்த காரியத்திற்காக கரு தப்பட்டிருக்கிறதோ அந்த காரியத்திற்கு உபயோகப்படுத்தாமல் அதாவது வீடுகட்டுமிடத்தில் பழவர்க்கங்கள் உண்டுபண்ணியாவது சாகுபடியாவது செய் தால் குத்தகை விதித்து வசூல்செய்ய நிலக்காரனுக்கு சுதந்தரமுண்டு, இந்த

தேசத்தின் வீடுகளின் புழக்கடைகளில் அதிக சாதாரணமாகவே பழவர்க்கங்களும், ஒரு மாமரம் ஒரு வேப்பமரம் போன்ற சிலமரங்கள் வைத்து பயிர் செய்கிறது வழக்கத்திலிருக்கிறது. ஆகையால் அப்பேர்ப்பட்ட கேசுகளில் வீடுஇடிந்து விழுந்துவிட்டபோதிலும் அந்த இடத்தை குத்தகை வசூல்செய்யும் பொருட்டு சாகுபடி நிலமாக கருதக்கூடாது. (29 ம. 81.)

(17) இந்த ஆக்டில் அநேக சொத்துக்களுக்கு சொந்தக்காரர் இன்னார் என்பதாக நிஷ்கரிஷை செய்யப்படாமலிருக்கிறது. அவர்களின் பாத்தியதையை நியாயக்கோர்ட்டில் ஸ்தாபித்துக் கொள்ளவேண்டியதா யிருக்கிறது. உதாரணமாக;—

(1) ஜமீன்தாரி கிராமத்தில் பொதுப்பிரயோஜனத்துக்கு விடப்பட்டிருக்கும் புறம்போக்கு நிலங்களில் ஜமீன்தாருக்குள்ள பாத்தியம்.

(2) ரயத்துவாரி கிராமத்தில் பொதுப்பிரயோஜனத்துக்கு விடப்பட்டிருக்கும் புறம்போக்கு நிலங்களில் கிராமப் பொதுசங்கத்தாருக்குள்ள பாத்தியம்.

(18) பொதுவான பாத்தியதை என்பது எல்லாருக்கும் உரிபபாத்தியம். மாமூலாயுள்ள பாத்தியதையானது சில ஜாதியாருக்குமாத்திரம் உள்ள பாத்தியதையையும் தனக்குள் அடக்கிக்கொள்ளுகிறது. மாமூல் பாத்தியதை என்ற வாசகம் நிரம்ப விசாலமான எல்லையை உடைத்தாயிருக்கின்றது. இந்த வாசகத்தில் சர்க்காருக்கிருக்கும் வெறும் சொந்தம் என்ற சுதந்திரத்தை தவிர மற்றதெல்லா பாத்தியதையும் அடங்குகின்றது. (கனம் பொருந்திய அட்வகேட் ஜெனரல்-வாதம், பக்கம் 246)

(19) ஒரு ஜமீன்தாரியின் எல்லைக்குள்ளிருக்கும் எல்லா நிலங்களும் அந்த ஜமீன்தாருக்கு சொந்தமானவைகள் என்று அதற்கு விரோதமாக ருஜுக் கொடுக்கும் வரையில் எண்ணப்படவேண்டும். (10 மூர் இண்டியன் அப்பீல் பக்கம் 174.)

(20) ஒரு ஜமீன்தாரியிலிருக்கிற தரிசு நிலங்கள் ஜமீன்தாருக்குச் சொந்தமானவைகள். (1865-ம் வரு 8-வது ஆக்டு பிரிவு 11, கிளாஸ் 4)

(21) ஜமீன்தாரியைப்போன்ற சாஸ்வதமாய் தீர்வை ஏற்பட்ட நிலங்களில் உற்பத்தியாகும் உலோகங்களுக்கு கவர்ன்மெண்டார் பாத்தியம் பாராட்டுகிறதில்லை. (1880-ம் வரு மார்ச்சு மீ 25 உயின் செக்கிரிடெரி ஆப் ஸ்டேட்டின் டெஸ்பாட்ச்சு.)

(22) மேல்கண்ட உத்திரவுக்கு முன்னால் உலோகங்களின் பாத்தியதை ஜமீன்தாருக்கு பாத்தியப்பட்டது என்பதும் அல்லது கவர்ன்மெண்டாருக்கு பாத்தியப்பட்டது என்பதும் தீர்மானமாகவில்லை. மேலேகண்ட உத்தரவினால்

ஜமீன்தாரரானவர் ஷை உத்திரவுக்குமுன்னால் இல்லாமல் இருந்தால் உலோகங்களுக்கு புதியதாக பாத்தியதையை அடைகிறதில்லை. (4 க. 362, 371.)

(23) ஜமீன்தாரியைப்போன்ற சாஸ்வதமாய் தீர்வை ஏற்பட்டிருக்கும் சொத்துக்களில் உலோகங்களின் பாத்தியதை ஜமீன்தாரரைச்சேர்ந்தது. கவர்ன்மெண்டார் தங்களுக்குள்ள உலோகங்களில் பாத்தியதையை ஜமீன்தாரருக்கே விட்டுவிட்டார்கள். (34 க. 753, 785.)

(24) ஆனால் மேலேகண்ட சங்கதிகளினாலே ஜமீன்தாரருக்கும், குடிகள் போன்ற 3-வது மனுஷியனுக்கும் உலோகங்களின் பாத்தியதையின் விஷயமாய் இருக்கக்கூடிய தகரார் பைசலாகவில்லை. (34 க. 753, 785.)

(25) ஒரு நிலத்தின் சொந்தக்காரனிடத்திலிருந்து 30-வருஷங்கள் போன்ற நீடித்த காலமாக நிலத்தீர்வையும் விசேஷ வரியையும் சர்க்காரால் வசூல் செய்துக்கொண்டு வருவதானது அந்த நிலம் ரயித்துவாரி காணியாக்ஷியின் பேரில் ஆதியில் சர்க்காரால் விடப்பட்டதாக கொள்ளவேண்டும். (28 ம. 505.)

(26) பூமிக்குச் சொந்தக்காரர்கள் சர்க்காராக விருந்தபோதிலும்சரி குடியானவனாக யிருந்தபோதிலும்சரி சர்க்கார் மேல்வார பாத்தியம் அதாவது இராஜ போகம் உடையவர்களென்பதும் குடியானவன் குடிவார பாத்தியதை உடையவன் என்பதும் குடியானவன் சர்க்காருக்குள்ள தீர்வையை கிரமமாக செலுத்துகிறவரையில் குடியானவனை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தக்கூடாது என்பதும் நிச்சயமாக ஏற்பட்டிருக்கிறது.

(27) 1864-ஹு 2-வது ஆக்டின்படி ஒரு நிலத்தை ரிவினியூ ஏலத்தில் எடுத்து சர்ட்டிபிகேட் பெற்றவன் அல்லது பட்டாதாரன் அப்படி சர்ட்டிபிகேட் அல்லது பட்டா பெற்று இருக்கும் காரணத்தினாலேயே நிலத்திற்கு வாஸ்தவியமான சொந்தக்காரனாக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஆனால், சர்க்கார் சம்பந்தமட்டில் நில சுதந்தரம் உடையவன் என்று எண்ணப்படுவான். (7 ம. 306.)

(28) வாஸ்தவத்தில் ஒருவனுக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு வேறு ஒருவன்பேருக்கு சர்க்காரில் பட்டா கொடுக்கப்பட்டு அவனுக்கு நிலம் சுவாதீனமானபோதிலும் கூட அவன் நிஜமான சொந்தக்காரனுக்கு விரோதமாக யாதொரு பாத்தியதையையும் அடையமாட்டான். அவன் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய கிஸ்தி பாக்கிக்காக நிலம் ஏலமான போதிலும் அவன் ஏல சர்ட்டிபிகேட் பெற்றிருக்கும் காரணத்தினால் யாதொரு பாத்தியதையும் அடைகிறதில்லை. (13 ம. 89; 28 ம. 537; இண்டியன் டிரஸ்டு ஆக்ட் பிரிவு 90-சி.)

(29) எந்த நிலத்துக்கு தீர்வை வசூலாகவேண்டியதோ அந்த நிலத்தில் இல்லாத விடுகள் முதலிய கட்டடங்களை அந்தத் தீர்வைக்காக ஜப்தி செய்து

ஏலத்துக்குக்கொண்டுவர 1864-ஞு 2-வது ஆக்டினுல் அதிகாரம் உண்டா என்பது சந்தேகம். (போ. புரொ 3874, 6-5-70; போ. ஸ்டா. ஆ. 41 (4) உட்பிரிவு).

ரயத்துவாரி பட்டாக்கள் பட்டாதாரர்களுடைய நிலங்களின்பேரில் ஏற்பட்டிருக்கும் தீர்வை மொத்தத்தைக் காட்டும் குறிப்புகளாக யிருக்கின்றன. ஆனல் அவைகள் ஒருவனுடைய பாத்தியதையைக் காட்டும் தஸ்தவேசுகள் ஆகமாட்டாது. (போ. புரொ 213, 23, 4. 90, 466. 5-8, 90; போ. ஸ்டா. ஆ. 30 (16) உட்பிரிவு.

ஒருபட்டாதாரன் அவனுடைய நிலத்தின் முழுபாகத்தையுமாவது அல்லது ஒருபாகத்தையாவது கவர்ன்மெண்டாரைப்பொருத்தமட்டில் பராதீனப்படுத்தவும் கீழ்குத்தகைக்குக் கொடுக்கவும், போக்கியம் வைக்கவும், விக்கிரயம் செய்யவும், தானம் கொடுக்கவும், மரணசாசனம் எழுதிக்கொடுக்கவும், அல்லது இதுபோன்ற வேறுவிதமான பராதீனம் செய்ய அதிகாரமுடையவனுயிருக்கிறன். அப்படி பராதீனம் செய்தல் கவர்ன்மெண்டாருக்கு விரோதமாக ஒரு நியாயஸ்தலத்தில் செல்லத்தக்கதானுலும் அத்துடன் பட்டா மாறுதலும் செய்யப்பட்டால் ஒழிய அந்தவகை பராதீனத்தை கவர்ன்மெண்டார் கவனிக்கிறதில்லை. ஏனென்றல் ஒரு பட்டாதாரனுக்கு அந்த பட்டாவுக்குச்சேர்ந்த நிலத்தில் சொந்தம், பாத்தியம் அல்லது நயம் இருந்தாலும் இல்லாமற்போனுலும் அதினுடைய சர்க்கார் தீர்வையை செலுத்த கவர்ன்மெண்டார் பட்டாதாரனேயே ஜவாப்தாரியாக்குகிறர்கள். (போ. ஸ்டா. ஆ. 28.)

ரயத்துவாரி காணியாட்சியின்பேரில் ஒரு நிலத்தை சர்க்காரில் ஒருவனுக்கு கொடுத்ததின் பின்னிட்டு அதைப் பிடுங்கி வேறே ஒருவனுக்கு கொடுக்க சர்க்காருக்கு அதிகாரமில்லை. ரயத்துவாரி காணியாட்சியின்பேரில் ஒரு நிலத்தை அனுபவிப்பவன் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய தீர்வையை அவன் செலுத்திக் கொண்டு வருகிறவரையில் அந்த நிலத்தை அனுபவித்துவர பாத்தியமுடையவனுக இருக்கிறன். சர்க்கார் தீர்வையை செலுத்த தவரும் பக்ஷத்தில் 1864-ஞுத்து 2-வது ஆக்ட்டுப்படி நடவடிக்கைநடத்தி அவன் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டியவனுக இருக்கிறன். (28 ம. 505.)

அனுமதி பெருமல் அனுபவித்து வருகிற நிலங்களுக்குத்தீர்வை விதித்து வாங்குவது.

3. கவர்ன்மெண்டாருடைய சொத்தாயிருக்கிற யாதொரு நிலத்தை யாதொரு நபர் அனுமதி பெருமல் அனுபவித்து வந்தால் அவர்—

(1) அப்படி அனுபவித்துவரும் நிலமானது தீர்வை விதிக்கப்பட்டிருக்கும் ஸர்வே நம்பராகவாவது அதன் பாகமாகவாவதிருக்கிற பட்சத்திலே, சந்தர்ப்பத்துக்கேற்ற பிரகாரம் தாம் அனுபவித்து

வந்திருக்கும் காலவரையறை முழுமைக்கும் ஷை நம்பருக்குரிய முழுத்தீர்வையையோ அல்லது அனுபவத்திலிருக்கும் விஸ்தீரணத்தின் சங்கியாப்பரிமாணத்துக்குத் தக்கபடி ஷை தீர்வையின் பாகத்தையோ தீர்வையாகச் செலுத்துவதற் குட்பட்டவராவார்; ஆனால், அனுபவத்திலிருந்துவந்த விஸ்தீரணத்தைப்பற்றி யோசிக்காமலே ஷை நம்பருக்குரிய முழுத்தீர்வையையோ அல்லது இன்னும் குறைந்த யாதொரு தொகையையோ கலெக்டராகிலும் அவருடைய மேல்விசாரணைக்குட்பட்டு தாசில்தாரர் அல்லது டிப்யுடி தாசில்தாரராகிலும் விசேஷ காரணங்களைக்கொண்டு விதிக்கலாம்.

(2) அப்படி அனுபவித்துவரும் நிலமானது தீர்வை விதிக்கப்படாத நிலமாயிருக்கிற பட்சத்திலே, அக்கம்பக்கத்தில் அதேமாதிரியான நிலங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வீதப்படியாவது சந்தர்ப்பத்துக்கேற்ற பிரகாரம் அந்தக்கிராமத்தின் அதிக உயர்ந்த புஞ்சை அல்லது நஞ்சை வீதப்படியாவது அப்படிப்பட்ட வீதங்கள் இராதபட்சத்திலே 8-வது பிரிவின்படிக்கான விதிகளிலாகிலும் உத்திரவுகளிலாகிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாகவாவது ஷை காலவறையறைக்குக் கணக்கிட்டு, அனுபவத்திலிருந்துவந்த விஸ்தீரணத்துக்குத் தீர்வையைத் தீர்வையாகச் செலுத்துவதற்குட்பட்டவராவார்.

ஆனால், இந்தப் பிரிவின் பிரகாரம் தீர்வை செலுத்துவதனால் எவ்விதமான அனுபோக பாத்தியதையும் உண்டாகமாட்டாது.

விவரணம்.—ஒரு பசலியில் பூர்த்தியாகாத ஒரு காலவறையறைக்கு அனுபோகத்திலிருந்து வந்ததை இந்தப் பிரிவின் காரியங்களுக்காகப் பசலி முழுமைக்கும் அனுபோகத்திலிருந்து வந்ததாகக் கொள்ளலாம்.

நோட்.—(1) இந்த சட்டம் கவர்ன்மெண்டாருக்கு பாத்தியப்பட்ட பூஸ்திதிக்கு மாத்திரம் சம்பந்தப்படுகிறது. இந்த சட்டம் 2-வது பிரிவில் வரையறுத்திருக்கும் கவர்ன்மெண்டாருடைய இதர சொத்துக்களுக்கு சம்பந்தப்படுகிறதில்லை. சர்க்கார் தண்ணீரை உத்திரவு இல்லாமல் உபயோகப்படுத்துகிறதற்காக இந்த பிரிவின்படிக்கு தரத்தீர்வையாவது இந்த ஆக்ட் 5-வது பிரிவின்படிக்கு தண்டத்தீர்வையாவது போடக்கூடாது. அப்பேர்ப்பட்ட கேசுகளுக்காக வேறு சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(2) இப்பிரிவின்படியானது ஜமாபந்தி ஆபீசர் அல்லது டிவிஷனல் ஆபீசரால் காயம்செய்தாலொழிய செல்லத்தக்கதல்ல. காயம் செய்யப்பட்ட பிறகு

பிரிவினை செய்யப்பட்ட பாகம் எப்பொழுதும் பிரத்தியோகமான நிலமாக எண்ணப்படும். (போ. ஸ்டா. ஆ. 3 (2) உட்பிரிவு.)

(3) "கலெக்டர்" என்றால் சென்னப்பட்டணத்தில் மதராஸ் கலெக்டர் என்றும் மற்ற இடங்களில் ஜில்லாவின் ரிவினியூ அலுவல்களை வகித்து வருகிற முக்கியமான அதிகாரி என்றும் பொருள்படும் (1897-ஆம் வருஷத்து 10-வது ஜெனரல் கிளாசஸ் ஆக்ட் 3-வது பிரிவு.)

(4) விசேஷ காரணங்களை பதிவுசெய்து வைக்கவேணுமென்பது நிச்சயமாய் ஏற்படவில்லை. (பட்டணம் கெஜட்டு ப. 254.)

(5) கவர்ன்மெண்டாருக்குள்ள தீர்வை விதிக்கும் பாத்தியம் இரண்டு காரணங்களால் ஏற்பட்டிருக்கிறது. (1) சட்டத்தினால் உண்டான பாத்தியம். (2) இராஜரீக சுதந்தரத்தினால் உண்டான பாத்தியம். (27 ம. 396.)

(6) நிலத்துக்கு நிலத்தீர்வை விதிக்கவும் அந்தந்த தீர்வையை அடிக்கடி மாற்றவும் கவர்ன்மெண்டாருக்குள்ள பாத்தியம் ஒரு சட்டத்தினால் உண்டு பண்ணப்பட்ட பாத்தியம் அல்ல. அந்த பாத்தியமானது இந்தியாவின் புராதனமானதும் சர்வ சாதாரணமானதுமான தர்மவிதியை யனுசரித்து கவர்ன்மெண்டாருடைய இராஜரீக சுதந்திரமேயாகும். (25 ம. 457; 27 ம. 396.)

(7) இராஜாங்க சுதந்திரம்என்பது நிலத்தின் சொந்தக்காரர்களிடமிருந்து விளையும் மாசூலின் இராஜ பாகத்தை பணமாக மாற்றி வசூல்செய்ய சுதந்திரம். இந்த விசேஷ சுதந்திரம் கவர்ன்மெண்டார் ஒருவருக்கே சொந்தமானது.

(8) கவர்ன்மெண்டார் தங்களுடைய இராஜரீக சுதந்திரத்தை அடியிற் கண்டபிரகாரம் பாராட்டுகிறார்கள். கவர்ன்மெண்டார் தங்களுடைய அதிகாரம் செலுத்தும் ஒழுங்கைக்கொண்டு நிலத்தின் மாசூலை அரசுக்குரிய பாகமாகிய இராஜபோகத்தை இவ்வளவு என்று தீர்மானித்து ஏற்படுத்தியும் அந்த அரசுக் குரிய பாகத்தை அடிக்கடி மாற்றியும் வருகிறார்கள். அரசுக்குரிய பாகத்துக்கு மேல்வார மென்றும் குடிகளுக்குரிய பாகத்திற்கு குடி வாரமென்று பெயர் வழங்குகிறதும் உண்டு. (27 ம. 396.)

(9) தீர்வை விதிப்பது 2-விதம். 1-வது ஜமீன்தாரி நிலங்கள் போன்ற சாசுவதமான திட்டம். 2-வது ரயத்துவாரி நிலங்கள்போன்ற சொற்பகாலத்துக் குரியதிட்டம். சொற்பகாலத்துக்குரிய திட்டம் கொஞ்சகாலத்துக்குப் பிறகு திருத்தப்படும். ஆனால் மேற்சொன்ன சொற்பகாலம் இவ்வளவு என்பதாக ஒவ்வொரு திட்டத்திலும் கவர்ன்மெண்டாரால் நிச்சயிக்கப்படும். அகவிலையின் மாறுதலை அனுசரித்தாவது நிலங்களுக்கு மறுபடி தரம் ஏற்படுத்துவதற்குப் போதுமான சந்தர்ப்பங்களிருந்தால் அவைகளை அனுசரித்தாவது அல்லது தானிய உற்

பத்தியை மறுபடி மதிப்பிட்டாவது நியாயமாயும் கிரமமாயும் தோற்றுகிறபடி தீர்வையை திருத்தப்படும். ஆனால் ரயத்து நிலத்தில் செய்திருக்கும் அபிவிருத்தியின் காரணத்தினால் அந்த அபிவிருத்தி விஷயமாக கவர்ன்மெண்டார் கடன் கொடுத்து உதவிசெய்திருந்தபோதிலும் தீர்வை உயர்த்தப்படமாட்டாது. (போ. புரொ. 180; 1-7-95, போ. ஸ்டா. ஆ. 1 (4) உட்பிரிவு.)

ரயத்துவாரி நிலங்களுக்கு செட்டில்மெண்டு டிபார்ட்மெண்டில் தீர்வை விதிக்கும் விதியின் ஒழுங்காவது.

(1) சாகுபடி செய்வதின் செலவைக்கழித்து மீதி ஏற்படும் மாசூலின் பகுதிக்கு அதிகப்படாமல் தீர்வையாக மாற்றப்படுவது. (போர்ட் புரொசீடிங்ஸ் நெம்பர் 1006, 20-3-84; போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர் நெ. 1, கிளாஸ் 3.)

(2) சர்க்கார் ஆதீனத்திலிருக்கிற நிலங்களை 3-வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. (1) தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தருசு நிலங்கள். (2) தீர்வை ஏற்படாத சர்க்கார் தருசு நிலங்கள். (3) புறம்போக்கு நிலங்கள்.

(3) தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தருசு நிலங்கள் சாகுபடிக்காகவே உத்தேசிக்கப்பட்டிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட நிலங்களில் அனுமதியில்லாமல் பிரவேசித்து சாகுபடி செய்தாலும் அதை தடுக்கவேணுமென்பது கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயமல்ல. புறம்போக்குநிலங்கள் ஜனங்களுடையபொது உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கின்றன. அந்தவகை நிலங்களில் உத்திரவில்லாமல் பிரவேசிப்பது ஆக்ஷேபணைகரம். தீர்வை ஏற்படாத தருசு நிலங்களில் உத்திரவில்லாமல் பிரவேசிப்பது ஆக்ஷேபகரமாயில்லையா என்ற விஷயம் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பொருத்ததாயிருக்கிறது. தருசு நிலங்களை புறம்போக்குகளாகவும் புறம்போக்குகளை தீர்வை ஏற்பட்ட தருசு நிலங்களாகவும் அவசியமான பொழுதெல்லாம் கவர்ன்மெண்டார் மாற்றுகிறார்கள்.

(4) இந்த ராஜதானியில் செட்டில்மெண்டு டிபார்டுமெண்டு முதல் முதல் 1858-வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. காலியாயிருந்த சர்க்கார் நிலங்களை ஒப்படை செய்வதற்கு சர்க்காரில் புராபாத்திய மிருக்கிறது.

(5) இந்த காலி நிலங்கள் விஷயத்தில் ஜனங்களின் தேவையை அனுசரித்து உத்தேசமாக சில நிலங்களுக்குத் தீர்வை ஏற்படுத்தப்பட்டன. சில நிலங்களுக்கு தீர்வை ஏற்படுத்தப்படாமல் விடுக்கப்பட்டன.

(6) ஒரு நிலத்தின் விஸ்தீரணம் நிஜமான அளவுப்படி பட்டாவில் பதிவுசெய்திருக்கும் விஸ்தீரணத்துக்கு வித்தியாசப்பட்டால் பதிவாயிருக்கும் விஸ்தீரணத்துக்கு 100-க்கு 10-விழுக்காடுவரையில் ஏற்படும் கம்மி ஜாஸ்தியை கவனிக்கப்படமாட்டாது. ஆனால் 100-க்கு 10-விழுக்காட்டுக்கு அதி

கப்படும் ஜாஸ்தி விஸ்தீரணத்துக்குத் தக்கபடி தீர்வையை உயர்த்தவும் அல்லது 100-க்கு 10-விழுக்காட்டுக்கு அதிகப்படக்கூடிய குறைவு விஸ்தீரணத்துக்குத் தக்கபடி தீர்வையை குறைக்கவும் வேண்டும். (போ. ஸ்டா. ஆர். 2.)

(7) பூமியின் மேற்பரப்பை சாகுபடி செய்வதற்காக விதித்திருக்கும் தீர்வைக்கு நில வருமானம் என்றபெயர். உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு எடுக்கப்பட்டால் அதற்காக பிரத்தியேகமான தீர்வை விதிக்கப்படும். (போ. புரோ. நெ. 1006. 20-3-84; போ. ஸ்டா. 1. (3) கிளாஸ்.)

(8) ஒரு பட்டாதாரன் அவனுடைய நிலத்தில் குளம்வெட்டியாவது, கிணர் தோண்டியாவது அல்லது கட்டடம் கட்டியாவது நிலத்தை அபிவிர்த்தி செய்தால் அந்த அபிவிர்த்திக்கு சர்க்காரில் ஜாஸ்தி தீர்வை விதிக்கக்கூடாது. (போ. ஸ்டா. ஆர். 28 (4) கிளாஸ்.)

(9) ஆக்கிரமித்தவனுக்கு தீர்வை விதிப்பதற்கு முன்னடி நோட்டீசு கொடுக்கவேண்டுமென்கிற அவசியமில்லை. தீர்வை என்றால் அபராதம் அல்ல, தீர்வை இந்தப் பிரிவின்படி விதிக்கப்படுகிறது. அபராதம் 5-வது பிரிவின்படி விதிக்கப்படுகிறது.

(10) இந்தப் பிரிவின் பிரகாரம் தீர்வை செலுத்தும் கடமையை கட்டாயப்படுத்துவதற்கு முன்னதாக நோட்டீசு கொடுக்கவேணுமென்கிற நிபந்தனையில்லை. நோட்டீசு வேண்டியதில்லை என்பதாக ஏற்பட்டிருப்பதின் காரணம் என்னவென்றால், மதராஸ் ராஜதானியில் சுமார் 5 லக்ஷம் போன்ற அதிக ஜாஸ்தி சங்கியையுள்ள நோட்டீசுகள் தயார் செய்யவேண்டுமென்பதே.

(11) இந்த ஆக்ட் 5 அல்லது 6-வது பிரிவின் நடவடிக்கை சம்பந்தமாய் முன்னடி நோட்டீசு கொடுக்கவேணுமென்று இந்த ஆக்ட் 7-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது; ஏனென்றால் தண்டத்தீர்வை விதிப்பதும் அப்புறப்படுத்துதலும் ஒவ்வொரு கேசிலும் உத்திரவு செய்யவேண்டுமென்பது இல்லை. (கனம் பொருந்திய Mr. G. ஸ்டோக்ஸ் பக்கம் 266.)

தீர்வை விதிப்பதற்கு அவசியமாயிருக்கவேண்டிய அம்சங்கள்.

(1) ஆக்கிரமிக்கும் சொத்து. சொந்த சொத்து அல்லாத கவர்ன்மெண்டு சொத்தாக இருக்கவேண்டும்.

(2) ஆக்கிரமிப்பு.

(3) அனுமதிபெறாமை.

(4) மேல்கண்ட மூன்று அம்சங்களும் இருந்தாலொழிய தீர்வைக்கு உள்ளாவதில்லை.

(5) இந்தப் பிரிவின்படி தீர்வை விதிக்க 2 காரணங்களிருக்கவேண்டும். முதலாவது தீர்வை செலுத்தக்கட்டுப்பட்டிருக்கவேண்டும். அதாவது விவாத நிலம் இந்த ஆக்ட் 2-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சர்க்கார் சொத்தாக யிருக்கவேண்டும். இரண்டாவதாக நிலத்தை அனுமதி பெறாமல் அனுபவிப்பது. மேற்கண்ட 2 காரணங்களும் சங்கதியைப் பொருத்த விஷக்களாகயிருக்கின்றபடியால் அவைகளை சீவில் கோர்ட்டார் விசாரித்து பைசல் செய்ய அதிகாரமிருக்கிறது. (கனம் மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ் அபிப்பிராயம். ப. 280.)

(6) ரிவினியூ அதிகாரிகள் தங்களுக்கும் விண்ணப்பதாரனுக்கும் ஏற்பட்டிருக்கும் நிலங்களுக்கும் மூங்கில்களுக்கும் யார் சொந்தக்காரன் என்கிற விவாதாம்சத்தை பைசல் செய்யவாவது அல்லது விண்ணப்பதாரனை அவனுடைய சுவாதீனத்திலிருந்து அப்புறப்படுத்தவாவது ரிவினியூ அதிகாரிகளுக்கு பாத்தியதையில்லை. மேல்கண்ட விஷயங்களில் ஒரு சாதாரணமான மனுஷியனுடைய ஸ்தானத்தையே ரிவினியூ அதிகாரிகள் வகிக்கிறார்கள் சர்க்காருக்கும் சாதாரணமான ஜனங்களுக்கும் உண்டாகும் நிலத்திற்கு சொந்தக்காரன் யார் என்கிற விவாதாம்சத்தை பைசல் செய்ய சாதாரணமான இரண்டு மனிதர்களுக்குள் ஏற்படும் தகராரைபோலவே சீவில் கோர்ட்டுக்கு மாத்திரம் அதிகாரம் இருக்கிறது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லாண்டு அக்வீஸிஷன் ஆக்ட் பிரகாரமாவது அல்லது இன்னும் மற்ற சட்டத்தினால் உண்டாகும் அதிகாரத்தைப்பற்றியாவது அல்லாத வேறு விதமாய் ஒரு மனிதனுடைய நிலத்தை சம்மரியாக சுவாதீனம் செய்துகொள்ளும் பக்ஷத்தில் வேறு ஒரு சாதாரண மனிதன் அவனது நிலத்தை அந்தமாதிரி சட்ட விரோதமாக ஆக்கிரமித்தால் எப்படி சுவாதீனத்தை இழந்தவனுடைய பாத்தியம் பாதிக்கப்படமாட்டாதோ அதேமாதிரியாக சர்க்காரார் அப்புறப்படுத்தினபோதிலும் பாதிக்கப்படமாட்டாது. அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் ரிவினியூ அதிகாரிகள் அக்கிரமமாக நுழைந்தவர்கள் ஆகிறார்கள். சொந்தக்காரன் அவனுடைய நிலத்தில் மறுபடியும் பிரவேசிப்பதினாலே அவனிடத்தில் கெட்ட எண்ணம் என்றும் ஏற்படுகிறதில்லை. (28. ம. 307.)

(7) அனுமதி பெறாத அனுபோகமா அல்லது அனுமதியின்பேரில் அனுபோகமா என்ற விவாத அம்சத்தை பைசல் செய்ய சீவில் கோர்ட்டாருக்கு பாத்தியமுண்டு. (கனம்பொருந்திய அட்வொகேட் ஜெனரல், கனம்பொருந்திய மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ் இவர்களின் வாதம். பக்கம் 280.)

(8) தீர்வைக்கு உள்ளாகிறதா என்ற கேள்வியை பைசல்செய்ய சீவில் கோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறது. தீர்வை விதிக்கப்பட்டவனுக்கு பரிகாரம் தேடிக்கொள்ள இரண்டு வழிகள் இருக்கின்றன.

1-வது. ரிவினியூ அதிகாரிகளுக்கு அப்பீல் செய்துகொள்வது.

2-வது. சீவில் கோர்ட்டுக்குப்போவது

அவன் இஷ்டப்படி ஷை இரண்டு வழியில் எதையாவது அனுசரிக்கலாம். சிவில் கோர்ட்டுக்கு போவதற்கு முன்னதாக ரிவினியூ அதிகாரிகளுக்கு அப்பீல் செய்து முடிவுபெறவேணுமென்பது அவசியமில்லை.

(9) யாதாமொருவன் நிலத்தீர்வை சர்க்காருக்கு செலுத்த கடமைப்பட்டிருக்கிறானா இல்லையா என்பதைப்பற்றி விசாரித்து பைசல்செய்ய சிவில் கோர்ட்டாருக்கு பூரண அதிகாரமிருக்கிறது. (2 ம. ஹை. கோ. ரி. 167 ; 12 ப. ஹை. கோ. ரி. அப். 275; 7 அ. 140; 27 ம. 396.)

தீர்வைத் தொகை விஷயமாக செய்யும் தீர்மானம் முடிவானதாகு மென்னபது.

4. 3-வது பிரிவின்படி செலுத்தத்தக்க தீர்வை வீதம் அல்லது தொகையின் விஷயமாக செய்யும் தீர்மானமானது எழுதிவைக்கப்படவேண்டிய தோடுங்கூட, அதை யாதொரு ஸிவில் கோர்ட்டார் ஆட்சேபிக்கவும் கூடாது.

நோட்:—(1) இந்தப் பிரிவின்படி விதிக்கப்படும் தீர்வைக்கு சிவாஜிமா என்று பெயர் வழங்குகின்றது. சிவாஜிமா இரண்டுவகைப்படும். (1) தரத்தீர்வை (2) தண்டத்தீர்வை 5-வது பிரிவின்படி விதிக்கப்படுவது.

(2) தீர்வைக்கு உட்படுத்துவது என்றால், சொந்தமல்லாத சர்க்கார்சொத்து, ஆக்கிரமிப்பு, உத்திரவு பெறாமை என்ற மூன்று விஷயங்களையும் நிச்சயிப்பது. தீர்வை விதிப்பது என்றால், தீர்வை வீதம் அல்லது தீர்வை மொத்தத்தை நிச்சயிப்பது.

(3) தீர்வைக்கு உட்படுத்துவதும் தீர்வை விதிப்பதும் பிரத்தியேகமான விஷயங்கள். தீர்வைக்கு உட்படுத்துவதைப்பற்றி இந்த ஆக்டு 3-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. தீர்வை விதிப்பதைப்பற்றி இந்த பிரிவில் சொல்லப்பட்டிருக்கின்றது. தீர்வை விதிக்கும் அதிகாரம் முற்றிலும் ரிவினியூ அதிகாரிகளைச் சேர்ந்ததாயிருக்கின்றது. இதில் சிவில் கோர்ட்டார் பிரவேசிக்க அதிகாரமில்லை. இந்த விஷயத்தில் பரிகாரந் தேடுகிறவன் ரெவினியூ அதிகாரிகளுக்கே அப்பீல் செய்துகொள்ளவேண்டியது. அவர்கள் செய்யும் தீர்மானம் முடிவானதாயிருக்கின்றது. (கனம் பொருந்திய மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ் பக்கம் 274—275.)

(4) கலெக்டர் தீர்மானம் எழுத்து மூலியமாய் எழுதப்படாவிட்டால் தீர்வை விதிக்கப்படவில்லை என்று எண்ணப்படவேண்டும். தீர்வையின் வீதமும் மொத்தமும் இந்த ஆக்டு 3-வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதற்கு அதிகப்படக் கூடாது.

(5) தீர்வை செலுத்தவேண்டிய கடமை ஏற்பட்டால் சர்க்கார் நிஷ்கரிஷை செய்யும் தீர்வை வீதம் அல்லது தீர்வை மொத்தத்தை ஆக்ஷேபிக்கவாவது அல்லது மாற்றவாவது சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. (27 ம. 396.)

(6) இந்தப் பிரிவானது 1864-ம் வருஷத்து 2-வது ஆக்டு 52-வது பிரிவிற்கு ஒத்திருக்கிறது. செட்டில்மெண்டு டிபார்ட்டுமெண்டில் இத்தேசத்தில் ஒவ்வொரு ஏகரா நிலத்திலும் மாசூல் இவ்வளவு விளைகிறது என்பதை கண்டுபிடித்து அதன்பேரில் சர்க்காருக்குக் கிடைக்கவேண்டிய ராஜபோகத்தை சந்தை விலையின் வீதப்படி ரூபாயாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த மாதிரி ஏற்பட்ட தீர்வை 30-வருஷகாலத்துக்கு அநுஷ்டானத்திலிருந்து பின்னிட்டு மறுபடி மாற்றப்படும். இந்த ஆக்டு 4-வது பிரிவினால் தீர்வை வீதம் அல்லது தீர்வை மொத்தத்தை ஆக்ஷேபிக்க சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. அது விஷயமாக சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கும் பக்ஷத்தில் எண்ணிறந்த வியாஜ்ஜியங்கள் சர்க்காரார் பேரில் வரக்கூடும். இதைத் தடுப்பதற்காகவே இந்தப்பிரிவு உண்டாக்கப்பட்டிருக்கிறது.

அநுமதி பெறாமல் நிலத்தை அநுபவித்துக் கொண்டு வரும் நபர் நோட்டீஸ் பெற்றுக்கொண்டபிறகு அபராதம் செலுத்துவதற்குள்ளாவது.

5. 3-வது பிரிவின்படி தீர்வை செலுத்துவதற் குட்பட்டிருக்கும் யாதொரு நபர், கலெக்டருக்காகிலும் அவருடையமேல் விசாரணைக்குட்பட்டு தாசில்தாரர் அல்லது டிப்புடி தாசில்தாரருக்காகிலும், யுக்தமாகத் தோற்றினால்,—

(1) நிலம் தீர்வை விதிக்கப்பட்ட நிலமாயிருக்கிறபட்சத்திலே ஐந்து ரூபாய்க் கதிகப்படாத ஒரு தொகையையாவது, 3-வது பிரிவின்படி ஒரு வருஷத்துக்குச் செலுத்தத்தக்க தீர்வைத் தொகைக்குப் பத்தத்தனைக்குச் சரியாயுள்ள ஒரு தொகையானது ஐந்து ரூபாய்க்கு அதிகமாயிருந்தால் அப்படிப்பட்ட தொகைக்கு அதிகப்படாத ஒரு தொகையையாவது அபராதமாகத் தீர்வையோடுகூட செலுத்துவதற்கும் உட்பட்டவராவார்; ஆனால், ஒரு வருஷத்துக்கதிகப்படாத யாதொரு காலவரையறைக்கு ஷை நிலத்தை அநுமதி பெறாமல் அநுபவிப்பவன் விஷயமாகச் சாதாரணமாய் எந்த அபராதமும் விதிக்கக் கூடாது.

(2) நிலம் தீர்வை விதிக்கப்படாத நிலமாயிருக்கிற பட்சத்திலே, பத்து ரூபாய்க் கதிகப்படாத ஒரு தொகையையாவது, 3-வது

பிரிவின்படி ஒரு வருஷத்துக்குச் செலுத்தத்தக்க தீர்வைத்தொகைக்கு இருபதத்தனைக்குச் சரியாயுள்ள ஒரு தொகையானது பத்து ரூபாய்க்கு அதிகமாயிருந்தால், அப்படிப்பட்ட தொகைக்கு அதிகப்படாத ஒரு தொகையையாவது அபராதமாகத் தீர்வையோடுகூட செலுத்துவதற்கும் உட்பட்டவராவார்.

நோட்—(1) முன்னாடி அனுமதிபெருமல்போனபோதிலும் சர்க்கார் தரிசு நிலங்களை சாகுபடி செய்வதை அதை தெரியப்படுத்தவேணுமென்பது சர்க்காருடைய கருத்து அல்ல. (கனம்பொருந்திய எல். ஏ. கோவிந்தராகவய்யர். ப. 259.)

(2) "ஒரு வருஷத்துக்கு அதிகப்படாத யாதொரு கால வரையறைக்கு" என்றால் ஒரு வருஷகாலம் அல்லது ஒரு வருஷத்துக்கு உட்பட்ட காலம் என்று அர்த்தமாகும்.

(3) "சாதாரணமாய்" என்ற வார்த்தைக்கு விசேஷ காரணங்கள் இருந்தாலொழிய என்று அர்த்தமாகிறது.

(4) விசேஷ காரணமுள்ள சில சமயங்களில் தீர்வை ஏற்பட்ட தருசு நிலங்களுக்கு ஒரு வருஷத்துக்கு மேல்பட்ட காலத்துக்கு தெண்டத் தீர்வை விதிக்க இந்தப் பிரிவு இடம் கொடுக்கின்றது. ஆனால், இந்தப் பிரிவு 2-வது கிளாசில் கண்டிருக்கிற தீர்வை ஏற்படாத நிலங்களுக்கு ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு தெண்டதீர்வை விதிக்க அதிகாரமில்லை.

(5) இந்தப் பிரிவின் ஆரம்ப முதல் கடைசி வரையில் "அதிகப்படாத ஒருதுகை", என்ற வாசகமே முற்றிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது; ஆகையால் ஜாஸ்தி அபராதத் துகை விதிக்கக்கூடியது இவ்வளவென்று நிச்சயிக்கப்படவில்லை. அபராதத்துகை குறைந்தது ஒரு பை முதல் விதிக்கலாம்.

(6) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெண்டமும் அப்புறப்படுத்தலும் தண்டனையாக விதிக்கப்படுமென்று நான் நினைக்கவில்லை. (கனம்பொருந்திய மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ் அபிப்பிராயம். பக்கம்-266.)

(7) தண்டத்தீர்வை விதிப்பது கலெக்டருடைய இஷ்டத்தைப்பொறுத்ததாயிருக்கிறது. தண்டத் தீர்வை விதிக்க கலெக்டருக்கு இஷ்டமில்லாவிட்டால் அவர் தண்டத்தீர்வை விதிக்கவேண்டும் என்பது கட்டாயமில்லை. (கனம் பொருந்திய அட்வோகேட் ஜனரல். ப. 254.)

(8) ஒரு குடியானவன் அயோக்கியத்தனமாயாவது அல்லது கெட்ட எண்ணத்துடனாவது இல்லாமல் நல்ல எண்ணத்துடன் தன்னுடைய சொந்த

நிலமென்பதாக வாஸ்தவத்தில் நம்பி அனுமதி பெறுமல் சர்க்கார் நிலத்தை ஆக்கிரமிப்பானுனல் அந்த ஆக்கிரமிப்புக்கு கலெக்டர் தண்டத்தீர்வை விதிக்க வேண்டுமென்பது கட்டாயமில்லை. (கனம்பொருந்திய K. வெங்கட்டராவ் ப. 254.)

(9) 5-வது பிரிவின்படி தண்டத் தீர்வை விதிப்பதும் 6-வது பிரிவின் படி அப்புறப்படுத்துவதும் கலெக்டருடைய இஷ்டத்தைப் பொறுத்தவைகள். கலெக்டர் அனுமதி கொடுத்து நிலத்தை சாகுபடி செய்பவன் இஷ்டப்பட்டால் இந்த ஆக்டு 8-வது பிரிவு, பி. சி. உட்பிரிவுகளின்படிக்கு ஆட்சேபனையும் இல்லாவிட்டால் அவன் நிலத்தைவிடாமல் சாகுபடி செய்யலாம்.

(10) பொது அக்கரையை அனுசரித்து காலியாகவிருக்கவேண்டிய நிலங்களின் ஆக்கிரமிப்பை மட்டுப்படுத்துவதற்காக தண்டத்தீர்வை விதிக்கும் கிரமம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் எப்போதும் சிந்திக்காத மார்க்கத்தில் தண்டத்தீர்வை விதிக்கும் ஒழுங்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதென்றும், குறைந்த சம்பளம் பெற்றுவரும் கிராமாதிகாரிகளும் அவர்களைப் போன்ற உத்தியோகஸ்தர்களும் பணம் அபகரிக்கும் நிமித்தம் அந்த ஒழுங்கை அடிக்கடி உபயோகிக்கிறார்களென்றும் சொல்லப்படுகின்றன. அப்படி சொல்லப்படுகிறது ஆதரவு இல்லாமல் சொல்லப்படுகிறது அல்ல. (2 ம. 390.)

வார்ஸ் இல்லாததினால் கவர்ன்மெண்டுக்கு சேருவது, கவர்ன்மெண்டார் கொடுத்ததை மறுபடியும் கைக்கொள்ளல் அல்லது பாத்தியதையின்பேரில் திரும்பவும் எடுத்துக்கொள்ளல் போன்ற விஷயங்களுக்கு சம்பந்தப்பட்ட நிலங்களுக்கு கவர்ன்மெண்டார் சுவாதீனத்துக்கு கொண்டுவந்தாலன்றி தண்டத் தீர்வை விதிக்கக்கூடாது. (இந்த ஆக்டு 16-வது பிரிவை பார்க்க.)

அனுமதி பெறமல் நிலத்தை அனுபவித்துவரும் நபர் சுருக்கவகையாய் நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தப்படுவதற்கும், மாசூல் பறிமுதல் செய்யப்படுவது முதல் செய்யப்படுவது முதலியவைகளுக்கும் உள்ளாவது.

6. (1) யாதொரு நிலத்தை அனுமதியின்றி அனுபவித்துவந்து அதற்காக 3-வது பிரிவின்படி தீர்வை செலுத்த உட்பட்டிருக்கிற யாதொரு நபரைக் கலெக்டர் சுருக்கவகையாய் நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தலாம்; மேலும், அந்த நிலத்தில் பயிர்செய்திருக்கும் யாதொரு மாசூல் அல்லது வேறே விளைபொருளும் பறிமுதல் செய்யப்படுவதற்கு உள்ளாகவேண்டும்; அல்லாமலும், அந்த நிலத்தின்மேல் கட்டியிருக்கும் யாதொரு கட்டிடம் அல்லது வேறே கட்டுக்கோப்பையாவது, அதன்மேல் சேர்த்துவைத்திருக்கும் யாதொரு வஸ்துவையாவது, கலெக்டருக்கு நியாயமானதாகத்தோற்றும் எழுத்துமூலமான நோட்டீஸ் கொடுத்தபிறகும்

அவர் அப்புறப்படுத்தாமலிருந்தால், அந்தக் கட்டிடம் அல்லது வேறே கட்டுக்கோப்பாவது வஸ்துவாவது பறிமுதல் செய்யப்படுவதற்குள்ளாகும். இந்தப் பிரிவின்படி பறிமுதல் செய்யப்படுபவைகளைப்பற்றிக் கலெக்டர் தீர்மானிக்கவேண்டும்; அன்றியும், அப்படி பறிமுதல் செய்யப்பட்ட யாதொரு சொத்தைக் கலெக்டர் உத்தரவு செய்கிற விதமாய் ஒருவகை செய்யவேண்டும்.

இன்ன விதமாய் அப்புறப்படுத்த வேண்டுமென்பது.

(2) இந்தப் பிரிவின்படி அப்புறப்படுத்துவதை அடியிற்கண்ட விதமாய்ச் செய்யவேண்டும்; அதாவது :—

அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதாக நன்றாய்த் தெரியவருகிற நபருக்கோ அவருடைய ஏஜண்டுக்கோ 7-வது பிரிவிற்சொல்லியிருக்கிற விதமாக நோட்டீஸ் சேர்ப்பித்து, அந்த நோட்டீஸ் வரப்பெற்றுக்கொண்ட பிறகு கலெக்டருக்கு நியாயமாகத்தோற்றும் ஒரு காலத்துக்குள்ளாக நிலத்தைக் காலிசெய்யும்படி அவருக்குக்கட்டளையிடுவதும், அந்த நோட்டீஸின்படி நடவாளிட்டால், ஷை நிலத்தைக் காலிசெய்ய மாட்டேனென்று நிராகரிக்கிற யாதொரு நபரை அப்புறப்படுத்துவதும் அல்லது அப்புறப்படுத்துவதற்காக கீழ் உத்தியோகஸ்தரொருவரை நியமித்தனுப்புவதும், அப்படிப்பட்ட எந்த நபரையாகிலும் அப்புறப்படுத்துகிற உத்தியோகஸ்தரை எவராவது எதிர்த்தாலும் அல்லது தடுத்தாலும், கலெக்டர் பிரஸ்தாப விஷயத்திற்குச் சம்மந்தப்பட்ட சங்கதிகளைப்பற்றிச் சுருக்கவகையாய் விசாரணை செய்யவேண்டும்; அல்லாமலும், மேலேசொன்னபடி எதிர்த்ததற்கு அல்லது தடுத்ததற்கு நியாயமான காரணம் ஏதுவுமில்லையென்றும் அந்தப்படி இன்னம் எதிர்த்துக்கொண்டு அல்லது தடுத்துக்கொண்டு வரப்படுகிறதென்றும் தெரிந்து திருப்தியடையும் பட்சத்திலே, ஷை கலெக்டரானவர் அந்த நபரைப் பிடிப்பதற்காக வாரென்ட் பிறப்பித்து, அவர் ஹாஜராவதன்மேல் அந்தப்படி தடுத்துக்கொண்டு அல்லது எதிர்த்துக்கொண்டு வரவொட்டாமல் செய்வதற்கு அவசியமாகத் தோற்றுகிறபடி 30 தினத்துக்கதிகப்படாத ஒரு காலவரையறைக்கு அவரைக் கலெக்டர் ஆபீசிலோ யாதொரு தாசில்தாரர் அல்லது டிப்டி தாசில்தாருடைய ஆபீசிலோ எங்கும் போகவொட்டாமல் அடைத்து வைக்கும்படியாய் உத்திரவுசெய்யலாம்; அல்லது, அவரை அந்தந்த ஜில்லா ஸிவில் ஜெயிலிலே ஷை காலவரையறைத்

குக் காவலில் வைப்பதற்காக, ஷெட்யூல் நமூனப்படியுள்ள வாரென்ட் சகிதமாக அனுப்பலாம்.

ஆனல், இந்தப் பிரிவின் பிரகாரம் அந்தப்படி உத்தரவுசெய்யப் பெற்ற அல்லது காவலில் வைக்கப்பட்ட எந்த நபரும் அதே விஷயங்கள் சம்பந்தமாய் இந்தியன் பினல் கோட் 183-வது, 186-வது அல்லது 188-வது பிரிவின்படி பிராது தொடரப்படுவதற்குள்ளாக மாட்டார்.

நோட்:—(1) பறிமுதல் செய்வதின் கருத்து.—நிலத்தை ஆக்கிரமிப்பதலிருந்து விடுவித்து அதை ஆதியிலிருந்த நிலமைக்குக்கொண்டு வந்துவிடுவது. உதாரணம்:—ஒருவன் நிலத்தை ஆக்கிரமித்து வீடுகட்டுகிறன். இந்த ஆக்கிரமிப்பை விடுத்து வீட்டை அப்புறப்படுத்தி நிலத்தை ஆதியிலிருந்த நிலமைக்குக் கொண்டுவந்து உபயோகப்படுத்தவேண்டிய பறிமுதல் செய்யப்படுகிறது.

(2) இந்தப் பிரிவில் பறிமுதல் செய்யப்படும் என்றவாசகம் உபயோகிக்கவில்லை. "பறிமுதல் செய்யப்படுவதற்குள்ளாகும்" என்றவாசகம் உபயோகித்திருக்கிறது. ஆகையால் எல்லா சந்தர்ப்பங்களிலும் பறிமுதல் செய்யவேண்டுமென்பது கட்டாயமில்லை. இந்த அதிகாரத்தைச் செலுத்தும் உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய யுக்தானுசாரம் பறிமுதல் செய்யவும் பறிமுதல்செய்யாமலிருக்கவும் அதிகாரமுடையவர்களாக யிருக்கிறர்கள். (கனம்பொருந்திய எல். எ. கோவிந்தராகவய்யர். அபிப்பிராயம் பக்கம் 258.)

(3) ஆக்கிரமித்தவன் ஆக்கிரமித்த நிலத்தில் அவனுக்கு பாத்தியப்பட்ட கட்டிடம், கட்டுக்கோப்பு அல்லது யாதொரு சொத்துக்களை அவனிஷ்டப்பட்டால் அப்புறப்படுத்திக்கொள்ள அவனுக்கு சுதந்தரமுண்டு. ஆனல் ஆக்கிரமிப்பு நிலத்தில் பயிர்செய்யுமாகுல் அல்லது விளைபொருளை அப்புறப்படுத்த சுதந்திரம் கொடுக்கப்படவில்லை.

(4) ஜெயிலில் வைக்கும் அதிகாரம் அடியிற்கண்ட சந்தர்ப்பங்களில் உண்டாகிறது—

(1) எதிர்த்தல் அல்லது தடுத்தல்.

(2) எதிர்த்தல் அல்லது தடுத்தல் இ. பி. கோ. 183. 184, 186-வது பிரிவுகளின் கீழ் குற்றமாகவேண்டும்.

(3) எதிர்த்ததற்கு அல்லது தடுத்ததற்கு நியாயமான காரணம் எதுவும் இல்லை என்று ஏற்படவேண்டும்.

(4) அந்தப்படி இன்னும் தொடர்ச்சியாக எதிர்த்துக்கொண்டு அல்லது தடுத்துக்கொண்டுவரவேண்டும்.

(5) மேற்கண்ட சங்கதிகளைப்பற்றி சுருக்கவிசாரணை செய்து கலெக்டர் திருப்தி அடையவேண்டும்.

(6) எதிர்த்தவனை அல்லது தடுத்தவனை மாஜிஸ்டிரேட்டு முன்பாக அனுப்புவதைக்காட்டிலும் சிவில் ஜெயிலில் வைப்பது அதிக இரக்கமுள்ள தண்டனையாகவிருக்கவேண்டும். ஆக்கிரமித்த நிலத்துக்கு பாத்தியமில்லாத ஒரு குடியானவன் அறியாமையால் மறுபடி அந்த நிலத்துக்குப் போய் எதிர்த்து அல்லது தடுத்து தொந்திரவுக்குள் அகப்பட்டுக்கொள்ளாமலிருக்கும்படிக்கு, தான் செய்தது பிசகு என்று தெரிவிக்கிறவரையில் அவனை தடுப்பதற்காகத்தான் சிவில் ஜெயிலில் வைப்பதின் அபிப்பிராயம் என்று (கனம்பொருந்திய மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ் தெரிவித்தார். பக்கம் 208,)

(5) குடிகளை காவலில் வைக்கும் அதிகாரத்தை கலெக்டர் கடைசியாக செலுத்தவேண்டியவராகயிருக்கிறார். இந்த நடவடிக்கை குடிகளுடைய நன்மைக்காகவே எற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால் கலெக்டர் பாரபக்ஷமில்லாமல் இருக்கக்கூடியவர் அல்ல என்னும் காரணத்தை முன்னிட்டு குடியானவனை கிரிமினல் கோர்ட்டுக்கு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்துவது அவனுக்கு கொடுமையை உண்டுசெய்வதாயிருக்கிறது. (கனம் மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ் பக்கம் 261.)

(6) கைதுசெய்வதும் அடைத்துவைப்பதும் இன்னும் எதிர்த்துக்கொண்டும் தடுத்துக்கொண்டும் வருவதை நிறுத்துவதற்காகமாத்திரம், தெண்டனையாக அல்லது தெண்டனையாகக் கருதி விதிக்க கலெக்டருக்கு அதிகாரமில்லை.

(7) நிலத்தை மறுபடி ஆக்கிரமிப்பவன்பேரில் கிரிமினல் கோர்ட்டில் பிராது தொடரக்கூடாது. அப்புறப்படுத்துகிற உத்தியோகஸ்தரை தடுத்தால் அல்லது எதிர்த்தால் மாத்திரம் அவன் கிரிமினல் கோர்ட்டில் பிராது தொடரப்படுவதற்கு உள்ளாவான். (கனம்பொருந்திய அட்வோகேட் ஜனரல். பக்கம் 270.)

அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபருக்கு முன்னதாக நோட்டீஸ்.

7. 5-வது பிரிவின்படியாவது 6-வது பிரிவின்படியாவது நடவடிக்கை நடத்துவதற்கு முன்னே, கலெக்டராவது சந்தர்ப்பத்துக்கேற்றபடி தாசில்தாரர் அல்லது டெப்யுடி தாசில்தாரராவது கவர்ன்மெண்டாருடைய சொத்தாயிருக்கிற நிலத்தை அனுமதியின்றி அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதாக நன்றாய்த் தெரியவருகிற நபருக்கு, அந்தப்படி அனுபோகத்திலிருந்து வரும் நிலத்தைக்கண்டும், 5-வது பிரிவின்படியோ அல்லது 6-வதுபிரிவின்படியோ ஷை நபருக்கு விரோதமாய் ஏன் நடவடிக்கை நடத்தக் கூடாதென்பதற்குப் பலானதேதிக்கு முன்பாகத் தமக்குக்காரணம்

அவர் காட்டவேண்டுமென்று அவருக்கு உத்தரவுசெய்தும் நோடீஸ் சேர்ப்பிக்கும்படி செய்யவேண்டும்.

தீர்வை வசூலைக்குறித்த சென்னபட்டணம் 1864-ம்ஹுலத்து 2-வது ஆக்ட் 25-வது பிரிவில் நிர்ணயித்திருக்கிற விதமாகவாவது பிரதேச கவர்ன்மெண்டார் 8-வது பிரிவின்படிக்கான விதிகள் அல்லது உத்திரவுகள் மூலமாய்க் கட்டளையிடுகிற வேறே விதமாகவாவது ஷை நோடீஸ் சேர்ப்பிக்கவேண்டும்.

நோட்.—(1) நோட்டீசுசேர்ப்பிக்கும் விதம் 1864-ஹுலத்து 2-வது ஆக்ட் 25-வது பிரிவில் அடியிற்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது. ஆக்கிரமித்தவனுக்காவது அல்லது அவன் சாதாரணமாய் குடியிருந்துவரும் இடத்தில் அவன் குடும்பத்தைச் சார்ந்த ஒரு வயதுவந்த புருஷனிடத்திலாவது அல்லது அவனுடைய அதிகாரம் பெற்ற ஏஜெண்டினிடத்திலாவது நோட்டீசு நகலைசேர்ப்பிக்க வேண்டியது; அல்லது அவன் கடைசியாய் குடியிருந்துவந்த வாசஸ்தலத்தில் ஒரு பயிரங்கமான இடத்திலாவது நோட்டீசு நகலை ஒட்டவேண்டியது. மேற்கண்ட நோட்டீசு சேர்ப்பிக்கும் நாலுவிதங்களில் வரிசைக்கிரமப்படிக்கு முன் சொன்னப் பிரகாரம் சாத்தியப்படாவிட்டால் பின் சொன்னபிரகாரம் நோட்டீசை சேர்ப்பிக்கவேண்டியது.

(2) உத்திரவில்லாமல் நிலத்தை அனுபோகத்திலுல் வைத்துக்கொண்டிருக்கும் நபருக்கு முன்னடி நோட்டீசு கொடுக்கவேண்டியது முக்கியமானது. ஆனல் அப்படிப்பட்ட நோட்டீசை சேர்ப்பிக்கும்விதம் அபாயகரமுள்ளதாயிருக்கிறது. ஏனென்றல் அது முற்றிலும் கிராமாதிகாரிகளுடைய இஷ்டத்தைப் பொருத்ததாயிருக்கிறது.

(3) நோட்டீசு சேர்வாகாவிட்டால் 5, 6 பிரிவுகளின்படி நடத்தப்படும் நடவடிக்கைகள் ரத்தாகவேண்டியது.

விதிகள் செய்ய அதிகாரம்.

8. பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவாகவாகிலும் ஏதேனும் குறித்த ஒரு சந்தர்ப்பத்திலாகிலும்—

(a) 3-வது பிரிவின்படி விதித்து வாங்கத்தக்க தீர்வை வீதங்களைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்.

(b) 5-வது பிரிவின்படி அபராதம் விதித்து வாங்குவதைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்.

(c) கவர்ன்மெண்டாருடைய சொத்தாயிருக்கிற ஏதேனும் குறித்த ஒருநிலமோ அல்லது குறித்த ஒரு வகுப்பைச்சேர்ந்த நிலங்களோ அனுபோகத்திலிருக்கக் தக்கவையல்லவென்று பிரசித்தம் செய்வதற்காகவும்.

(d) இந்த ஆக்டின்படி நோட்டீசுகளைச் சேர்ப்பிப்பதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்.

விதிகள் அல்லது உத்திரவுகளைச்செய்யலாம்.

மேற்படி பொது விதிகள் அல்லது உத்தரவுகளை முந்திபிரசித்தம் பண்ணிய பிறகுதான் செய்யவேண்டும்.

விதிக்கப்படும் தீர்வை அல்லது அபராதத்தை நில வரிப் பாக்கியைப் போல் வசூல்செய் வது.

9. யாதொரு நிலத்தை அனுமதிபெறுமல் அனுபோகத்தில் வைத்துக் கொண்டிருக்கிற யாதொரு நபருக்கு இந்த ஆக்டின்படி விதிக்கப்பட்ட தீர்வைத்தொகையும் அபராதத்தொகையும் நிலவரியாகப் பாவிக்கப் படவேண்டும்; மேலும், அவைகளைச் சந்தர்ப்பத் துக்கேற்றபடி தீர்வை வசூலைக்குறித்த சென்னப் பட்டணம் 1864-ம்வருஷத்து 2-வது ஆக்ட் அல்லது சென்னை இராஜதானிப்பட்டணத்து நிலவரியைக்குறித்த (திருத்துவதற்கான) 1867-ம்வருஷத்து 6-வது ஆக்டின் நிபந்தனைகளின்படி மேற்படி நபரிடத்திலிருந்து நிலவரிப்பாக்கியைப்போல் வசூல்செய்யலாம்.

நோட்.—(1) குடிகள் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய தீர்வைக்கு வருமானம் என்றுபெயர். நிலத்துக்குடையவனுக்கு குடியானவன் செலுத்தும் தொகைக்கு குத்தகை என்று பெயர். (போர். ஸ்டா. ஆ. 41.)

(2) ஆப்காரி ஆக்ட்டிலும் இன்னும் அதுபோன்ற இதர ஆக்டுகளிலும் கவர்ன்மெண்டாருக்குச் சேரவேண்டிய தொகையை நிலத்தீர்வையின் பாக்கியைப்போல வசூல்செய்யலாமென்று கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆக்டிலோவென்றால், 3-5 பிரிவுகளின்படி முறையே விதிக்கப்படும் தீர்வையும் தண்டமும் நிலத்தீர்வையென்றே சொல்லப் பட்டிருக்கிறது.

அப்பீல்.

10. (1) **(a)** இந்த ஆக்டின்படி யாதொரு தாசில்தாரர் அல்லது டெப்புடி தாசில்தாரரால் ஜாரிசெய்யப்பட்ட எந்த தீர்ப்பு அல்லது உத்திரவின் மேலாவது கலெக்டரிடத்திலும், **(b)** அப்பீலின் மேலல்லாமல் மற்றப்படி ஜாரிசெய்யப்பட்டிருக்கும் யாதொரு கலெக்டருடைய எந்த தீர்ப்பு அல்லது உத்திர வின்மேலாவது டிஸ்டிரிக்ட் கலெக்டரிடத்திலும் **(c)** அப்பீலின்மேலல்லாமல் மற்றப்படி ஜாரிசெய்யப்பட்டிருக்கும் யாதொரு டிஸ்டிரிக்ட் கலெக்டருடைய எந்த தீர்ப்பு அல்லது உத்திரவின்மேலாவது ரெவினியு போர்டாரிடத்திலும் அப்பீல் செய்துகொள்ளலாம். அப்பீலின் மேல் கலெக்டராலாகிலும் டிஸ்ரிக்ட் கலெக்டராலாகிலும் ஜாரி செய்

யப்பட்டிருக்கும் யாதொரு தீர்ப்பு அல்லது உத்திரவின்மேல் அப்பீலில்லை; ஆனால், இந்த ஆக்டின்படி டெப்யுடி தாசில்தாராலாவது தாசில்தாராலாவது கலெக்டராலாவது ஜாரி செய்யப்பட்டிருக்கும் யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவை டிஸ்டிரிக்ட் கலெக்டர் புனராலோசனைசெய்து திருத்துவதும், இந்த ஆக்டின்படி யாதொரு உத்தியோகஸ்தரால் ஜாரிசெய்யப்பட்டிருக்கும் யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவை ரெவினியு போர்ட்டார் புனராலோசனைசெய்து திருத்துவதும் சட்டசம்மதமாகும்.

(2) இந்த ஆக்டின்படி யாதொரு அப்பீலாவது புனராலோசனைக்காகச்செய்து கொள்ளப்படும் மனுவாவது பைசலாகிற வரையிலே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி கலெக்டராகிலும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டராகிலும் ரெவினியு போர்டாராகிலும் - எந்த உத்திரவின்மேல் அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அல்லது எந்த உத்தரவைப் புனராலோசனைசெய்து திருத்தவேண்டுமென்று கோரப்படுகிறதோ அந்த உத்தரவை அமுலுக்குக்கொண்டுவராமல் நிறுத்திவைக்கலாம்.

நோட்.— ஜில்லா கலெக்டருடைய தீர்மானத்தின்பேரில் ஒரே ஒரு அப்பீலும் டிவிஷனல் ஆபீசர், தாசில்தாரர் இவர்களுடைய உத்திரவின்பேரில் அப்பீல்களும் ரிவிஷனும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அப்பீல் காலநிர்ணயம்.

11. எந்தத் தீர்ப்பு அல்லது உத்திரவைப்பற்றிக் குறைசொல்லப்படுகிறதோ அந்தத் தீர்ப்பு அல்லது உத்திரவின் தேதியிலிருந்து அறுபது தினம் கடந்த பிறகு அப்பீல் செய்யக்கூடாது. ஆனால், மேற்படி அறுபது நாள் காலவரையறையைக் கணக்கிடுவதில், எதன்மேல் அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்தத் தீர்ப்புக்கு அல்லது உத்தரவுக்கு ஒரு நகலைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய காலத்தைக் கழித்துவிடவேண்டும்; மேலும், இதனால் நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள்ளாக அப்பீல் செய்துகொள்ளாதிருந்ததற்குப் போதுமான காரணமிருந்ததாக அப்பீல்தாரர் எந்த அதிகாரியிடத்தில் அப்பீல் செய்துகொள்ளுகிறாரோ அந்த அதிகாரிக்குத் திருப்தியாகும்படி காட்டினால், நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குப் பிறகும் அப்பீலை ஏற்றுக்கொள்ளலாம்.

நோட்.—(1) ஒருவனுடைய அப்பீல் எப்போது பைசல்செய்யப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியது ஒவ்வொரு கக்ஷிக்காரனுடைய அபேட்சையைப்பொருத்ததாயிருக்கின்றது. கக்ஷிக்காரர்களின் முன்னிலையில் அப்பீலை பைசல்செய்வது அல்லது அப்பீலின்முடிவான உத்திரவை கக்ஷிக்காரர்களு

க்கு தெரியப்படுத்துகிறது என்கிற வழக்கம் சாதாரணமாய் அனுஷ்டானத்தில் இல்லாமலிருந்தால் கக்ஷிக்காரர்கள் அவர்களுடைய அப்பீல் விண்ணப்பங்களை தாக்கல் செய்யும்பொழுதே அப்பீல் உத்திரவுக்கு நகல் விண்ணப்பம் காபி காகிதங்களுடன் தாக்கல் செய்வது நலமாயிருக்கும்.

(2) இந்தப்பிரிவில் செய்யப்பட்டிருக்கும் 60-நாள் அப்பீல் வாயிதா உத்திரவின் தேதியிலிருந்து கணக்கிடப்படவேண்டியது. சாதாரணமாய் கக்ஷிக்காரன் முன்னிலையில் உத்திரவு சொல்லும் வழக்கமில்லையாதலால் உத்திரவு பிறந்ததேதி தெரிந்துகொள்வது கக்ஷிக்காரனுக்கு ஒரு பிரயாசை. இந்த பிரயாசைக்கு அடியிற்கண்ட 2 விதமான பரிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது காலதோஷத்துக்கு நீண்டகாலமாகிய 60 நாள் ஏற்படுத்தியிருப்பது; 2-வது கக்ஷிக்காரன் 60-நாளைய காலவரம்பைத்தாண்டின போதிலும், தகுந்த முகாந்திரமிருக்கும் பக்ஷத்தில் காலம் கடந்த அப்பீலை அதிகாரி ஏற்றுக்கொள்ளலாம் என்பதாக அதிகாரம் கொடுத்திருப்பது.

அப்பீல் மனுவுடனே வைத்திருக்க வேண்டிய தஸ்தவேஜு.

12. இந்த ஆக்டின்படிக்குள்ள ஒவ்வொரு அப்பீல் மனுவையும் எதன்மேல் அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்தத்தீர்ப்பு அல்லது உத்திரவு சகிதமாகவாவது அதற்குச் சரியானதென்று அத்தாட்சி செய்யப்பட்டிருக்கும் நகல் சகிதமாகவாவது அனுப்பவேண்டும்.

செலாவணியாய்க் கொண்டிருக்கிற மற்ற சட்டங்கள் அமுலி லிருப்பதற்குப் பாதகமில்லையென்பது.

13. அனுமதிபெறுமல் நிலத்தை யனுபோகத்தில் வைத்துக்கொள்ளுகிற யாதொரு நபரை அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற எந்தச் சட்டத்தின்படியாகிலும் நடவடிக்கை நடத்தப்படுவதற்குள்ளாவதினின்றும் நிவாரணை செய்வதாக இந்த ஆக்டிலுள்ளதெதற்கும் அர்த்தம் பண்ணுவது கூடாது.

ஆனால், இந்த ஆக்டு 5-வது பிரிவின்படி எந்த நபரிடத்திலிருந்தாவது யாதொரு அபராதம் விதித்து வாங்கப்பட்டிருக்கிற பக்ஷத்திலே, அந்தப்படி அனுபோகத்தில் வைத்திருப்பதற்காக வேறே யாதொரு சட்டதிட்டப்படி அவரிடத்திலிருந்து அதேமாதிரியான அபராதம் விதித்து வாங்கக்கூடாது.

ஆக்டின்படி நடந்தப்பட்ட நடவடிக்கைகளிலுல் பாதி

14. இதில் முன்னல் நிபந்தனை சண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, இந்த ஆக்டின் பிரகாரம் நடந்தப்பட்ட நடவடிக்கைகளிலெதனுகிலும் தாங்கள் பாதிக்கப்பட்டதாக எண்ணுகிற நபர்கள் பரிகார நிமித்

க்கப்படும் நபர்கள் கொண்டுவரும் வியாஜ்ஜியங்களுக்கு பாதகமுண்டாக மாட்டாதென்பது.

நியமாக சிவில் கோர்ட்டாருக்கு விண்ணப்பஞ் செய்து கொள்ளக்கூடாதென்று இந்த ஆக்டிலுள்ளதெதுவும் தடுக்கிறதாக எண்ணக்கூடாது: ஆனால், அப்படிப்பட்ட யாதொரு வியாஜ்ஜிய மூலத்தைக்கொண்டு மேற்படி நபர்கள் கொண்டுவரும் யாதொரு வியாஜ்ஜியமானது அதற்கு ஹேது உண்டான காலம் முதற்கொண்டு ஆறு மாதத்துக்குள்ளாகக்கொண்டு வரப்பட்டாலன்றி மற்றப்படி அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தை சிவில் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

விவரணம்.—ஷை வியாஜ்ஜிமூலமானது,

(a) யாதொரு தீர்வை அல்லது அபராதத்தின் விஷயத்திலே, எந்தத்தேதியில் அது விதிக்கப்பட்டதோ அந்தத்தேதியிலும்,

(b) அப்புறப்படுத்துவது அல்லது பறிமுதல் செய்வதின் விஷயத்திலே, எந்தத்தேதியில் அந்தப்படி செய்யப்பட்டதோ அந்தத்தேதியிலும்,

உண்டானதாக எண்ணப்படும்

நோட்.—(1) சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதா அல்லது சர்க்காருக்கு பாத்தியப்பட்டதா என்கிற கேள்விக்கு ருசுவின் பளு முதல்முதல் வாதியின் பேரில் விழுகிறது.

(2) இந்தச்சட்டம் இடம்கொடுக்கும் 2-விதமான பரிகாரங்களையும் தேடிக் கொள்ள கொடுத்திருக்கும் 6-மீ காலதோஷ வாய்தா நிரம்பவும் குறைவான காலமாயிருக்கிறது. மனம்சோர்ந்த கக்ஷிக்காரன் 2 பரிகாரங்களையும் தேடிக் கொள்ள போதுமான சாவகாசம் இல்லாததினால் ஷை 2 மார்க்கங்களில் ஏதாவது ஒரு மார்க்கத்தைமட்டும் தேடவேண்டியவனாகயிருக்கிறான். ரெவினியூ அதிகாரிகளுக்கு அப்பீல் செய்துகொண்டு 4-மாதகாலத்துக்குள் அப்பீல் முடியாவிட்டால் கக்ஷிக்காரன் சிவில்கோர்ட்டில் தேடும்மார்க்கத்தை இழந்துவிடவேண்டியவனாகயிருக்கிறான். ஏனென்றால், சிவில் கோர்ட்டில் வியாச்சியம் செய்வதற்கு முன்னதாக சிவில் பு. கோ. 8-வது பிரிவுப்படிக்கு கக்ஷிக்காரன் கலெக்டருக்கு 2-மீ வாய்தா ஏற்படுத்தி நோட்டீஸ் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான். ஆகையால் சிவில் கோர்ட்டுக்குப் போகும்படியாக நேரிடக்கூடிய கக்ஷிக்காரன் ஆரம்பத்திலேயே கலெக்டருக்கு சி. பு. கோ. 80-வது பிரிவுப்படிக்கு நோட்டீஸ் கொடுத்து நோட்டீஸ் மூலமாய் ரெவினியூ அதிகாரிகளிடம் பரிகாரம் தேடிக்கொள்ளவாவது அல்லது ரெவினியூ அதிகாரிகளிடம் அப்பீல் மூலமாய் பரிகாரம் தேடினால் 4-வது மாதத்தில் அவனுடைய அப்பீல் பைசலாகாமலிருந்தபோதிலும் 1908-வருஷத்து 5-வது ஆக்ட் சி. பு. கோ. 80-வது பிரிவுப்படி கலெக்டருக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியவனாகவுமிருக்கிறான்.

(3) சட்டப்படி கட்டாயப்படுத்தப்படாமல் தானுக சுநாவில் செலுத்தியிருக்கும் தண்டத்தீர்வையை மறுபடி வாப்சுகேட்க பாத்தியமில்லை. சொத்தை ஜப்திசெய்ய பிராசெஸ் பிறப்பிவிக்கப்பட்ட பின்பாவது அல்லது மறுதளிப்பின் பேரிலாவது தண்டத்தீர்வை செலுத்தப்பட்டால் அதை வாப்சுகேட்க பாத்தியமுண்டு. (28. ம. 313.)

ஆக்ட் ஜாரியாவதற்கு முன்னே தண்டத்தீர்வை விதிப்பது செலாவணியாகுமென்பது.

15. கவர்ன்மெண்டார் சொத்தென்று இதனுல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற யாதொரு நிலத்தை அனுமதியின்றி அனுபவித்து வந்திருக்கிற யாதொரு நபரிடத்திலிருந்து தண்டம் அல்லது தடுப்பதற்கான தீர்வை அல்லது கட்டணமாக யாதொரு தொகையை வசூல் செய்வதினிமித்தம் ஒரு கலெக்டர் நடத்தியிருக்கிற ஒவ்வொரு நடவடிக்கையும், இந்த ஆக்ட் ஜாரியாவதற்கு முன்னே ஷை தொகை வசூல்செய்யப்பட்டிருந்தால், சட்டப்படி நடத்தப்பட்டிருந்ததாக எண்ணப்படும்; ஆனுல், இந்தப் பிரிவானது - இந்த ஆக்ட் அமுலுக்கு வரும் போது யாதொரு அசல்கோர்ட்டிலாகிலும் அப்பீல் கோர்ட்டிலாகிலும் தீர்ப்பாகாமல் நின்றுவிட்டிருக்கிற எந்த வியாஜ்ஜியங்களுக்கும் பிரயோகப்படவுமாட்டாது. சரியான அதிகார வரம்புள்ள யாதொரு கோர்ட்டாரால் ஏற்கனவே ஜாரிசெய்யப்பட்ட யாதொரு தீர்ப்பு அல்லது உத்திரவு செலாவணியாவதையும் அமுலுக்கு வருவதையும் பாதிக்கவுமாட்டாது.

தீர்ப்பாகாமல் நின்று விட்டிருக்கிற வியாஜ்ஜியங்களுக்குப் பாதகமுண்டாக மாட்டாதென்பது.

நோட்.—(1) இந்த ஆக்டு ஜாரியாவதற்கு முன்னே விதிக்கப்பட்டு 1864-ஞூத்து 2-வது ஆக்டின்படிக்கு வசூல்செய்யப்பட்ட தண்டத்தீர்வை சட்டசம்மதமாக செலாவணியாகத் தக்கதென்று இந்தப்பிரிவினுல் ஏற்படுகிறது. அப்படி செலாவணியாகத்தக்கதென்று சொல்லுவதினுல் கக்ஷிக்காரன் சர்க்காருக்கு தீர்வை செலுத்தக்கடமைப்பட்டிருக்கிருனுவென்னும் விவாதத்தை பைசல் செய்து கொள்வதற்காக சிவில் கோர்ட்டுக்குப்போகும் பாத்தியதை எடுபட்டுப்போகவில்லை. (கனம்பொருந்திய மிஸ்டர் ஜி. ஸ்டோக்ஸ், கனம்பொருந்திய அட்வோகேட் ஜனரல் இவர்களின் அபிப்பிராயம். பக்கம் 209.)

(2) ஒரு சட்டமானது அது பிறந்ததற்கு முன்னிட்ட காலத்திற்கு அது செலாவணியாகிறதாக அர்த்தம் செய்யக்கூடாது. அப்படி செலாவணியாகவேண்டுமானுல் அது விவரம் தெளிவாகவும் சந்தேகமில்லாமலும் வெளிப்படையாக அந்த சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கவேண்டும். ஏனென்றுல் ஒரு காலத்தில் ஒரு காரியம்செய்தல் சட்ட ஒழுங்காயிருந்த விஷயம் அதின் பின்னிட்டு புதிய

தாக எற்பட்ட சட்டத்தினால் விரோதமாக எண்ணப்படுவது ஒருவனுடைய புத்திக்கு எட்டினவரையில் நியாயமாக தோற்றுகிறதில்லை (21-ம. 507)

(3) இந்த ஆக்டு ஜாரியான தேதியாகிய 1905-ஞு மே-மீ 22-தேதிக்கு முன் விதிக்கப்பட்டு வசூலானதெண்டத்தீர்வை சட்ட விரோதமானது. ஆனால் இந்தச்சட்ட விரோதமான செய்கை 1905-ம்ஞு மேமீ 22டைக்குள் கோர்ட்டில் தாவா செய்யப்படாவிட்டால் அந்தச்செய்கை சட்டத்துக்கு முன்னிட்டு செய்யப்பட்டிருந்தபோதிலும் அது செய்யப்பட்ட காலமுதற்கொண்டு சட்டசம்மதமாக கருதப்படவேணுமாக இந்த ஆக்டு 15-வது பிரிவால் எற்படுகிறது.

வார்சு இன்மையினால் எடுத்துக்கொள்வது, கொடுத்ததை மீண்டு வாங்கிக்கொள்வது, அல்லது உரிமை வழியே அடைவது என்னும் பாத்தியதை மூலமாய் உரிமை கொண்டாடப்படுகிற நிலங்களுக்குப்பாதக முண்டாகாதென்பது.

16. வார்சு இன்மையினால் எடுத்துக்கொள்வது, கொடுத்ததை மீண்டும் வாங்கிக்கொள்வது அல்லது உரிமை வழியே அடைவது என்னும் பாத்தியதை மூலமாய் உரிமை கொண்டாடப்படுகிற எந்த நிலங்களையாகிலும் கவர்ன்மெண்டார் ஸ்வாதீனத்துக்குக் கொண்டுவந்திருந்தாலன்றி மற்றப்படி, அந்த நிலங்களுக்கு இந்த ஆக்டிலுள்ளதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

ஷெடியூல்.

6-வது பிரிவின்படி கலெக்டர் பிறப்பிக்கவேண்டிய வாரெண்ட் நமூனா.

முகர்.

லேயுள்ள சிவில் ஜெயில் விசாரணை, உத்தியோகஸ்தருக்கு.

தாலூகாவில் கிராமத்திலே,

யுள்ள ஒரு நிலத்திலிருந்து இ. எப். என்பவரை (அல்லது தம்மை எனவே எ. பி. என்பவரை) அப்புறப்படுத்துகையிலே

லுள்ள மேலே கண்ட எ. பி. என்பவர் சி. டி. என்பவரை எதிர்த்தபடியாலும் அல்லது தடுத்தபடியாலும், அந்தப்படி இன்னும் தடுத்துக்கொண்டு வரவொட்டாமல் (அல்லது எதிர்த்துக்கொண்டு வரவொட்டாமல்) செய்வதற்காக ஷை எ. எப். என்பவரை எங்கும் போகவிடாமல் அடைத்துவைக்க உத்திரவு செய்வது அவசியமாயிருக்கிறபடியாலும் இதனால் நீர் 1905-ஞுத்திய சென்னபட்டணத்து நிலம் ஆக்கிரமிப்பதைப்பற்றிய ஆக்டு 6-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி, ஷை எ. பி. என்பவரை ஜெயிலில் உம்முடைய விசாரணையின் கீழ் வைத்துக்கொண்டு, அவரை தினத்துக்கு

அங்கே ஜாக்கிரதையாய் அடைத்து வைக்கவேண்டியவராவீர்.

-ம்ஞு மீ ௳,

(கலெக்டர் கையெழுத்து.)

தமிழ்ச் சட்ட புஸ்தகங்கள்.

	ரூ.	அ.
ஸ்டாம்பு, ரெஜிஸ்டர் பலவித பத்திரங்கள் எழுதும் மாதிரியுடன் வ்வகார சிந்தாமணி ...	2	8
உயில், பாகம், வார்சு பாத்தியம், ஸ்திரீதன முதலியதுள்ள பெரிய ஹிந்துலா. ...	2	0
சிவில் விவகாரம் பூர்த்தியாயடங்கிய சீவில்லா... ...	3	0
போலீஸ் மாஜிஸ்ட்ரேட் சம்பந்தமான கிரிமினல் லா ...	3	0
விவாக வயது சட்டம் ...	1	0
புது கிராம முனிசிப் சட்டம் ...	1	8
கிராம சுகாதாரம்	0	2
கிராம பஞ்சாயத்து சட்டம் ...	1	4
லோகல் போர்ட் ஆக்ட் ...	1	8
குற்ற சம்பந்தமான இந்தியன் பீனல் கோட்	3	0
எவிடன்ஸ் (சாட்சி) ஆக்ட் ...	1	0
ஹிந்து தர்ம ஸ்தாபன சட்டம்...	1	0
டிரஸ்ட்டி ஆக்ட்	0	10
நில ஆக்கிரமிப்பு சட்டம் ...	0	4
கால நிர்ணய ஆக்ட் ...	0	8
புதிய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்.	0	10
பரம்பரைகிராமஉத்தியோகஆக்ட்	1	0
புது இன்கம்டாக்ஸ் சட்டம் ...	1	
பெரிய மகம்மதியன் லா ...	2	0
புதிய ஸ்டாம்பு ஆக்ட்.	0	12
எஸ்டேட் ஜமீன் குடி நில சட்டம்	1	4

தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.
இராஜாமணி	0	8
வனமாலிகா	0	8
ஜயதேவன்	0	8
பத்மநாபன்	0	8
நளினாக்ஷி	0	5
பாஸ்கரன்	0	10
சத்திய விஜயன்	0	10
பக்த சந்திரிகா	0	10
இரத்தின விமானம் ...	0	14
தாரு சுகாசுவம்	0	14
நளாகினி விஜயம்	0	[illegible]
சோமகாந்தன் ...	0	10
சுசிலா	0	10
ஜார்ஜிகான் என்னு ராணியின் சரித்திரம்	0	[illegible]
இல்லறமா ? துறவறமா ? ...	0	[illegible]
மகாமக மகாத்மியம் ...	0	2
இரதிசாஸ்திரம் (படங்களுடன்)	1	4
15 விரதமடங்கிய விருதகல்பம் (கதைகளுடன்உயர்ந்த பதிப்பு)...	0	12

கிராமக் கோர்ட்டுகளுக்கு வேண்டிய பாரங்கள்.

		ரூ.	அ.
பிரதிவாதி சம்மன்	100-க்கு	0	10
சாட்சி சம்மன்	100-க்கு	0	10
கிரிமினல்சாட்சிசம்மன்	100-க்கு	0	10
குற்றவாளி சம்மன்	100 க்கு	0	10
ஷை பிடிவாரண்டு	100-க்கு	0	10
டிக்கிரி நிறைவேற்ற ஆட்சேபனை செய்யப் பிரதிவாதிக்கு நோட்டீசு	100-க்கு	0	10
பஞ்சாயத்தாருக்கு நோட்டீசு		0	10
கிரிமினல் வாதிக்கு மறு ஈரங்கி நோட்டீசு	100-க்கு	0	10
ஷை சிவில ஷை	100-க்கு	0	10
முச்சலிக்கா பாரம்	100-க்கு	0	10
ஜப்தி கட்டளை பாரம்	100 க்கு	0	10
பிராதபிளையின்டுபாரம்	50-க்கு	0	10
சம்மதி உடன்படிக்கை	50-க்கு	0	10
நிறைவேற்ற மனுபாரம்	50-க்கு	0	10
கியாலண்டர் (பாரம்)	50-க்கு	0	10
வாக்குமூல பாரம்	50-க்கு	0	[illegible]
நகல் வாங்க மனுபாரம்	50-க்கு	0	10
எல இஸ்தியார்	50-க்கு	0	10
கிரிமினல் கேஸ் டாகெட்	50-க்கு	0	10
சிவில் கேஸ் ஷை	50 க்கு	0	10
சிவில் டிக்ரி தீர்ப்புபாரம்	50-க்கு	1	[illegible]
ஷை டிக்ரிக்கு நகல்பாரம்	50-க்கு	0	10
கைசாத்து புஸ்தகம்	1-க்கு	பை	6
ஷை	100-க்கு	2	8
ஷை. ரப்பர் 50-பக்கம்	1-க்கு	0	8
ஷை. செட்டி பைண்டு ஷை	1-க்கு	0	4
ஷை. ஷை 100பக்கம்	1-க்கு	0	8

மதுகரவேணி விலாசம் புத்தகசாலை; வேபேரி—மதருஸ்.